# அருள் ஒளி



வண்ணை நாச்சிமார் கோவில்
முகப்புத்தோற்றம்



மஹாகும்பாபிஷேகம்
(03.04.2006) இனிது
நிறைவேறியது

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சித்திரை
மாத
இதழ்

தெல்லிப்பழை
இலங்கை
2006

மலர்
45

யோகர்சுவாமிகள் குருபூசை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது



யோகர் சுவாமிகள் விழாவில் திருமதி.கலா பொன்னம்பலம் சிறப்புரையாற்றுகிறார்



செல்லத்துரை சுவாமிகள்





உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:

செஞ்சொற்செல்வர்

திரு.ஆறு.திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2006 வியய வருடம் சித்திரை மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மலர் 45

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2006


## அஞ்ச யாதொன்றுமில்லை

சித்திரைப் புத்தாண்டு பிறந்து விட்டது. வியயவருடத்து விழாக்கள் தொடங்கி விட்டது. எனினும் எம்மண்ணில் அச்சமும், அமைதியின்மையும் அவலமும் தொடர்கிறது. மக்களிடையே மனச்சோர்வு மலிந்து காணப்படுகிறது. நீதி என்னும் நிஜத்தை நீதி தேவதை நிலைநாட்டிக் காக்க வேண்டும்! அகம் நொந்து அழும் அடியவர், அரணாக விளங்கும் ஆண்டவனை அநுதினமும் வேண்டு கின்றனர். ஒரு நாட்டை ஆளும் மன்னன் மக்களையும், தேசத்தையும் மாண்புறக் காக்கும் நீதி நெறியினை

மாநிலம் காவலன் ஆவான்
மன் உயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு
தன்னால், தன் பரிசனத்தால்
ஊனம் மிகு பகைத்திறத்தால்
கள்வரால், உயிர்கள் தம்மால்
ஆன பயம் ஐந்தும் தீர்த்து
அறம் காப்பான் அல்லனோ?

என சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் அழகாக எடுத்துரைத் துள்ளார். எம்மண்ணில் வாழும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். மேற்குறித்த ஐந்து பயத்தாலும் துடிக்கின்றார்கள். இவ்வேளையில் சோகத்தை வளர்த்து சோர்ந்து

விடாமல் மக்கள் வாழ ஆற்றுப்படுத்த வேண்டியது ஆன்மீகம் சார்ந்தவர்களின் அரிய கடமையாகும். துன்பம் கண்டு துடிப்பதால் மனம் சோர்ந்து கிடப்பதால் ஏதும் பெரிய நன்மை உண்டாவதில்லை. இறை வழிபாட்டால் துன்ப நினைவில் இருந்து நாம் மீளலாம் என்பது ஆன்றோர் எமக்கு எடுத்துரைத்துள்ளனர். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற வாசகத்தை இதயத்தில் இருத்தி இடர் களைய வேண்டியது எம் கடனாகும். துன்பம் வந்த இடத்து அதனைப் பற்றியே எண்ணி, வருந்தி மனம் சோரும் இயற்கை மனித குலத்தையே அடிமைப் படுத்தும் பாழ்படுத்தும் பெரும் பகையாகின்றது. அத்தகைய சோர் வுக்கு எவரும் எக்காலத்தும் இடம் தருதலாகாது. "இடுக்கண் வருங்கால் நகுக" என்பதன்றோ வள்ளுவர் வாய்மொழி! எல்லாம் என்னவாகுமோ? என்ன நடக்கப் போகிறதோ? என்ற ஏக்கத்தில் இருந்து காக்கக் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை வலுப்பெற வேண்டும். நாமும் வலிமை பெற்று நம்மைச் சார்ந்தவர்களையும் வலிமை பெறச் செய்வது இன்றைய நாளில் அவசியமாகும். இறைவனிடம் முழுமையாக தம்மை ஒப்புக் கொடுத்து விடின் அஞ்ச யாதொன்றும் இல்லை என்பது ஞானிகளின் கருத்து. இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் நாம் அனைவரும் முழுமையாக இறைவனிடம் ஒப்புவித்து அச்சமின்றி வாழ முறப்பட வேண்டும். இறை நாமத்தை உச்சரித்து அக இருளை அகற்ற வேண்டும். கடமைகளைக் கைவிடாது கடவுளின் துணையுடன் காலத்தை வெல்ல வேண்டும். எம்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அப்பர் சுவாமிகளின் அருமருந்தான வார்த்தையை அயராது உச்சரித்து விடிவு பெறுவோமாக.

நம்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பனைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே.

- அப்பர் சுவாமிகள்

- ஆசிரியர்

**உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்**

| | |
|---|---|
| அலுவலகம்: | ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், |
| ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், | கோவில் வீதி, |
| தெல்லிப்பழை. | நல்லூர். |

# மனிதனை மேம்படுத்துவது ஆன்மிக வாழ்வு

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சமயம் என்பது பாதை மட்டுமே. நாங்கள் எங்கு செல்ல வேண்டுமோ, எந்த இடத்தை அடைய வேண்டுமோ, அந்த இடத்திற்கு எம்மை இட்டுச் செல்கின்ற பாதை அல்லது வழிதான், சமயம். எங்கள் பிரயாணத்தின் இறுதி இலக்கு, இறைவனை அடைதல் ஆகும். மனிதரில் உள்ள இழிந்த குண இயல்புகளையும், கீழ்த்தரமான உணர்வுகளையும் விலக்கி, மேலாம் நன்னெறியில் வாழ்கையை நடத்திச் செல்ல உறுதுணையாக வருவது சமயம். மனிதரில் இத்தகைய நன்மாற்றங்கள் நிகழ வழிப்படுத்துவது, நெறிப்படுத்துவது சமயம். மனிதர்கள் இத்தகைய நன் மாற்றங்களை அணைத்துக்கொள்ளாது, மனம் போன போக்கில், புலன்களைக் கட்டுப்படுத்தாது, அவற்றிற்கு பணிந்து கொடுத்து, பிறழ்வான நடத்தைகளிலும் கூடாத செயல்களிலும் ஈடுபடுவார்களேயானால், மனிதப் பிறவி எடுத்ததன் பிரதான இலக்கான இறைவனை அடைதல் எய்தப்பட முடியாமல் போய்விடுகிறது.

மனம் முதலிய அந்தக்கரணங்களையும் மற்றும் ஐம்புலன்களையும் அடக்கி ஆழ்பவன், ஆன்மிக வலிமை நிரம்பப் பெற்றவன் ஆகின்றான். ஒவ்வொரு மனிதனிடமும் ஆன்மிக வளம் உண்டு. ஆன்மிகம் மனிதனுள் ஆழ்ந்து கிடந்தால் மட்டும் போதாது. அது வெளிப்பாடாக வேண்டும். அன்பு, கருணை, நீதி, உண்மை என்பனவாக ஆன்மிகம் வெளிப்பாடாகும் போதுதான், ஆன்மிகம் மனிதனின் குண இயல்புகளையும், செயலாற்றல்களையும், நன்நெறிப்படுத்துகிறது. மனிதனில் ஆழ்ந்து, புதைந்து கிடக்கும் ஆன்மிகத்தை, தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம். அந்த வகையில் சமயத்திற்கும் ஆன்மிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் ஆக மிளிர்பவன் ஆன்மிகவாதி. ஆன்மிகம், மனிதனைக் கெட்டவழியில் செல்ல விடாது தடுத்து, நல்ல வழியில் வாழச் செய்கிறது. ஆன்மிக பலம் அதிகரிக்க அதிகரிக்க, மனிதரின் வாழ்க்கைத் தரமும், பண்பும் பயனும் மிகுந்ததாக வளர்ச்சி பெறுகிறது.

ஒழுக்க நெறியே ஆன்மிக நெறியாகும். அந்த வகையில் ஒழுக்கம் பேணி வாழ்பவர்கள், ஆன்மிக வாழ்வு, வாழ்கின்றவர்கள் ஆகின்றனர்.

"உலகம் பழித்தது ஒழித்து" செம்மை வாழ்வு வாழ்தலே ஒழுக்க வாழ்வு என்கிறது வள்ளுவம், "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று", என்னும் தமிழர் கண்ட உலகம் பற்றிய கருத்து இங்கு நோக்கற்பாலது. உயர்ந்தவர்கள் எவ்வழியிற் சென்றனரோ, எவ்வெவற்றை மேற்கொண்டும் எவ்வெவற்றை விலக்கியும் வாழ்ந்தனரோ, அவ்வழியிற் சென்றும் அவர்கள் மேற்கொண்டவற்றை ஓம்பியும், அவர்கள் பழித்து ஒழித்தவற்றை விலக்கியும் வாழ்தல் ஒழுக்க வாழ்வு ஆகும். சமுக வாழ்வியல் சிறப்பதற்கும் உன்னதம் பெறுவதற்கும்,

அரசியல் சட்டங்கள், சமூக சட்டங்கள் என்பன மட்டும் இருந்தால் போதாது: ஆன்மிக ஒழுக்கங்களும் பேணப்படுதல் அவசியம். இன்று ஆன்மிக வாழ்வியல் சமூக வாழ்வியலிலிருந்து வேறுபடுத்தப்பட்டு இருப்பதாலேயே சமூக வாழ்விலும் தனிமனித வாழ்விலும் அனர்த்தங்களும் அமைதியின்மையும், அவலங்களும் துன்பம் துயர்களும் மலிந்து காணப்படுகின்றன.

மனிதர்கள் தற்காலத்தில் ஒழுக்கப் பண்புகளை அலட்சியம் செய்கிறார்கள் அதன் வழி ஆன்மிகம் ஓரங்கட்டப்படுகிறது. ஆன்மிகம் என்பது ஏதோ பெரிய விடயம் என்று எண்ணிக் கொண்டு, அதனோடு தம்மைத் தொடர்பு படுத்திக் கொள்ளத் தயங்குபவர்களையும் காண்கின்றோம். அது அவர்களின் அறியாமையாகும். ஆன்மிகம் மனிதனுக்கு அன்னியமான ஒன்று அல்ல. ஒவ்வொரு மனிதனிடமும் ஆன்மிகம் உண்டு. அதனை மனிதன் உணர்வதில்லை. தம்மிடம் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மிகத்தை வெளிப்படுத்த முயல வேண்டும். அப்போது தான் மனித வாழ்வு உயர்வான தெய்வீக வாழ்வாக மலர்ச்சி பெறுகிறது. வாழ்க்கையில் தொல்லைகள் ஒழிந்து, நீதியும் நேர்மையும் தழைத் தோங்குகின்றன. சாந்தியும் சமாதானமும் எங்கும் நிலவ வாய்ப்பு ஏற்படுகின்றது. மாறாக, மனித வாழ்கையில் காணப்படும் தற்போதைய அவலங்களுக்குக் காரணம், ஆன்மிகம் வாழ்க்கையோடு இணைந்து கொள்ளாமையேயாகும். அன்பும் அறமும் ஆன்மிகத்தின் வெளிப்பாடுகள். நீதியும் உண்மையும் ஆன்மிகத்தின் தோற்றங்கள். எனவே அவை மனித வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகின்றன. "பண்புடையார் பட்டுண்டு உலகு" என்கிறது வள்ளுவம். ஆன்மிக வழியில் வாழ்க்கையை நடத்துபவர்கள் "பண்புடையார்", எனப்படுகின்றனர்.

ஆன்மிகம் மனித பண்பாட்டினைப் போஷித்து வளர்க்கின்றது. மனித ஒழுக்க நடத்தைகளை மேம்படுத்துகின்றது. மனிதர்கள் ஆன்மிகமயப்படுத்தப்பட வேண்டியது எத்துணை அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டால், வாழ்க்கையில் எந்நாளும் இன்பம் நிலவும், தொல்லைகள் விலகும் என்பது உறுதியாகி விடும்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

**பிறக்கும் புதிய வருடத்தில் எங்கும்**
**அருள் ஒளி வீசட்டும்.**

அறத்தின் வழியே அகிலம் நடந்தால்
அனைத்தும் இன்பமாய் ஆகி விடுமே
மறத்தால் உலகம் இன்று அழியுது
மனிதனை மனிதன் சாப்பிடும் காலம்
உறக்கம் இன்றியே நாயாய் அலைந்தும்
உலகில் நிலைத்தது ஒன்றும் இல்லையே
பிறக்கும் புதிய வருடத்தில் எங்கும்
பிரகாசமாக அருள்ஒளி வீசட்டும்.

**கவிஞர் வ. யோகானந்தசிவம்**

# உமாதேவியாரின் சாரூபம் பெற்ற கௌரி

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

முன்னொரு காலத்தில் விக்கிரம பாண்டிய மன்னனுடைய தோளில் நிலமகள் நிலை பெற்றிருந்தாள். அந்நாளில் மதுரையில் விருபாக்கன் என்றொரு மறையவன் வாழ்ந்து வந்தான். விருபாக்கனுடைய மனையாள் சுபவிரதை என்னும் பெயருடையாள். சுபவிரதை அருந்ததி போன்ற கற்புடையாள்.

விருபாக்கன் சுபவிரதை என்றும் இவர்களுடைய மங்கல மனைமாட்சியில் நன்மக்கட் பேறின்மையால் நலிந்து வருந்தினார்கள். பிள்ளைப்பேற்றைக் கருத்திற் கொண்டு அளவிறந்த தூய சிவபுண்ணியங்கள் புரிந்தார்கள். இருவரும் ஒழுக்க சீலத்தை மேற்கொண்டார்கள். அன்னையராகிய சப்த மாதர்கள் திருமுன்பு வந்தார்கள். சப்த மாதர் எழுவர். அவர்கள் பிரமாணி, நாராயணி, மாயேசுவரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி என்போராவர்.

அந்தணன் அந்தணி இருவரும் சப்தமாதர் முன்பு எய்தி இனிய மாதவம் புரிந்தார்கள். செய்தவப் பேறாக ஒரு சீரிய பெண் மகவைப் பெற்று மகிழ்ந்தார்கள்.

விருபாக்கன் குடும்பத்தினர் பெற்றெடுத்த பெண் குழந்தைக்குக் கௌரி என்று பெயரிட்டு அழைத்தார்கள்.

கௌரி தனது ஐந்தாண்டுப் பிராயத்தில் தந்தையாரிடத்தில் பின்வருமாறு வினாவினாள்:

"அப்பா! இந்தப் பிறவியை நீக்கும் தெய்வத்தன்மை வாய்ந்த மந்திரம் யாது?

விருபாக்கன் மகளாருக்கு பராசக்தியினுடைய திருநாமத்தை நவின்றான் கௌரி சிவசக்தியின் திருமந்திரத்தைக் கேட்டு உணர்ந்தாள். மந்திரப் பொருளினையும் ஓதும் முறையினையும் உள்ளபடி அறிந்து கொண்டாள் கௌரி. உலக முதல்வியின் மனுவைக் கௌரி நாளிலும் பொழுதிலும் நாத்தழும் பேற நாவில் நவின்றும் நெஞ்சு உரம்பெற நினைத்தும் வருவாளாயினாள்.

விருபாக்கன் கௌரியிடத்தில் மிக்க அன்பு பாராட்டி வந்தான். தனது தவக்கொழுந்தின் அழகிற்கும், பண்பிற்கும் தெய்வ பக்திக்கும் இசைவான மணவாளன் எப்பொழுது வருவான் எங்கிருந்து வருவான் என்று தன் மனதில் உசாவிய வண்ணம் பொழுதைக் கழித்து வந்தான்.

கௌரிக்கு வயது எட்டானது. ஒரு நாள் ஒரு வைணவப் பிரமசாரி விருபாக்கனுடைய வீட்டு வாசலில் பிச்சைக்கு வந்து நின்றான்.

விருபாக்கன் ஐயம் கேட்டு வந்த பிரமசாரிக்குக் கௌரியைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு விருப்பங் கொண்டான். அந்தணன் அது குறித்துத் தனது மனைவியையோ இனசன சுற்றத்தவரையோ கலந்து ஆலோசிக்கவில்லை. விருபாக்கன் அச்சம் சிறிதுமின்றி நீரினை எடுத்துப் பிரமசாரியின் கரத்தில் வார்த்தான். திருமணம் நிகழ்ந்தது போலாயிற்று.

கௌரியன் கன்மமும் பிச்சைக்கு வந்த பிரமசாரியினுடைய நல்வினைப் பயனும் கூட்டிவைக்க விருபாக்கன் மந்திரத்தோடு கமண்டல நீரைக் கையில்

ஊற்றினான். கன்னிகா தானஞ் செய்து முடித்தான். அதனைக் கேட்டுப் பெற்ற தாயும் பிறவுள சுற்றத்தாரும் மனந் தளர்ச்சி அடைந்தார்கள்.

விருபாக்கன் ஐயம் கேட்டு வந்த பிரமசாரியினுடைய குலத்தை ஆராயவில்லை. கோத்திரத்தைக் கேட்கவில்லை. குடிப் பிறப்பின் மேன்மையை குறிக்கொள்ளவில்லை. ஒழுக்கத்தையும் கல்வியையும் இருக்கும் இடத்தை எண்ணிப் பார்க்கவில்லை. எல்லா நூல்களையும் ஆராய்ந்து அறிந்து அந்தணன் தனது மகளின் மணாளனை ஆராயாது தராதத்தஞ் செய்து கொடுத்தான். இது என்னே வியப்பு! விதி வழியே மதி சதி செய்து கதி அருளும் போலும் என்று எண்ணி உறவினர் இரங்கி ஏங்கினார்கள்.

பிரமசாரியினுடைய குடி குலம் கோத்திரம் சூத்திரம் பிறவும் மிகப் பொருத்தமானது என்று எல்லோரும் பின்னர் அறிந்து கொண்டார்கள். மனக் கவலையை மாற்றி மகிழ்ச்சி கொண்டார்கள். தங்கள் மரபுக்கு மாறுபாடில்லாத பொருதமாதலால் விதி சதி செய்யவில்லை எனத் தேறுதல் அடைந்தார்கள்.

வைணவ மதக் கண்டுண்ட ஒழுக்கம் ஒன்றையே குறையாகக் கண்டார்கள். விருபாக்கன் முன்னரே கௌரியை தத்தற் செய்தமையால் இனி மறுப்பது எவ்வாறு?

வைணவப் பிரமசாரிக்குக் கௌரியைத் திருமணஞ் செய்து கொடுப்பதற்கு எல்லோரும் உடன்பட்டார்கள்.

விருபாக்கன் தாயும் ஒக்கலும் சம்மதம் அறிந்து திருமணத்தை நிகழ்த்தினான். விருபாக்கன் ஓமத்தீயின் முன்னர் இருந்து கௌரியை வைணவப் பிரமசாரிக்கு வதுவை செய்து கொடுத்தான்.

சிவத்தவ ஒழுக்கத்தில் அகலா அன்பினனான விருபாக்கன் மணமக்களை ஆசீர்வதித்துப் பல மங்கல வரிசைகளைச் செய்தான். தான் பெற்ற முல்லை மலர்மாலை சூடிய கூந்தலையுடைய கௌரியை மணமகனோடும் செல்லுவதற்கு விடை அளித்தான்.

மணமகன் வறியவன் பொன்முடிப்புப் பெற்றவன் போன்றான். மனைகள் தோறும் ஐயம் ஏற்று உண்டு திரிந்த பிரமசாரி இப்போது மணமகனான். திருமகளைத் திருமணம் செய்து வருபவனைப் போலத் தன் இல்லத்தை வந்தடைந்தான். கொடுமையையே ஒழுக்கமாகக் கொண்டு பேணும் வைணவமதத்தைச் சார்ந்த தாயும் தந்தையும் அது கண்டு தரியாதவரானார்கள்.

பெற்றோர்கள் கௌரியின் திருமணக் கோலத்தையும் சிவ சிந்தனையை யும் சைவ தவ வேடப் பொலிவையும் உற்று உற்று நோக்கினார்கள். கருகிய உடல்போல உள்ளம் வெதும்பினார்கள். கௌரியை வேறாக ஒதுக்கித் தள்ளினார்கள். அவளிடத்தில் அற்பமேனும் அன்பு பாராட்ட மாட்டார்கள். நாளிலும் பொழுதிலும் கௌரியை கண்ட மாத்திரத்தில் காரணமின்றி நிந்திப்பார்கள்.

ஒருநாள் வேற்றூருக்குச் சென்றார்கள். தனது சுற்றத்தாருடைய திருமணத்திற்கு எனக் கூறிக் கௌரியைத் தனியே விட்டு ஏகினார்கள். இல்லினை இறுகப் பூட்டி வல்லையில் போனார்கள்.

திருநீறு அகத்திலுள்ள அழுக்கை அகற்றித் தூய்மை செய்யும் உண்மையை உபநிடதம் உரைப்பதை உணர்ந்தும் மண்ணை அழுக்குண்டாகப் பூசும் வடிவினையுடைய வைணவர்கள் வீட்டினைப் பூட்டி வெளியே சென்றார்கள். இல்லத்தில் தனித்திருக்கும் கௌரி தன் மனத்தில் சிந்திக்கின்றாள். இன்று குற்றம் வந்து குறுகா வண்ணம் ஒரு சிவனடியாரைக் காணப்பெறாமல் என் கண்கள் களிப்பின்றிக் கலங்குகின்றது என்று கவலையிழாந்து கண்ணீர் பொழிந்தாள்.

சிவனடியார்க்கு அன்பில்லாத சிந்தை இரும்பு. சிவனடியார்க்குத் தொண்டு செய்யாத உடம்பு மரம். சிவனடியாரிடத்தில் பஞ்சப் புலனைச் செலுத்தா வடிவம் பாவை. வேதம் துதிக்கும் சைவ நெறி நில்லாத நெறிகள் பிறவியில் தள்ளும் பிணி என்று எண்ணி எண்ணிக் கௌரி மனம் மறுகுவாள்.

அனைத்து உயிர்களுக்கும் இம்மை மறுமை இன்பம் நிச்சயமானது. அவற்றை ஆன்மாக்களுக்கு அருளுபவன் உயிருக்கு உயிரான சிவபிரான் என்பார்கள். அரனை உள்ளுவார்க்கு உடல் உரை உள்ளம் மூன்றிலும் பத்தி வெள்ளம் பரக்கும் என்பார்கள். அந்த நெறியில் ஒழுபவர்களுக்கு வினைகளால் வருந் துன்பங்களைத் துடைப்பதற்கு எடுத்த வடிவமன்றோ சிவனடியார் திருவேடங்கள். என்றென்றெல்லாம் இவ்வாறு ஏசறவு கெண்டிருந்தால் கௌரி.

கௌரிக்கு அருள் புரியும் செவ்வி நோக்கிச் சுந்தரபாண்டியனாக வீற்றிருந்து அரசாட்சி புரிந்த சோமசுந்தரக் கடவுள் திருவுளம் பற்றினர்.

மதுரை சோமசுந்தரப் பெருமான் திருச்செவிகளிலும் திருமார்பிலும் திருக்கரங்களிலும் திருச்சென்னியிலும் திருத்தோள்களிலும் திருக்கழுத்திலும் உருத்திராக்க மணிகள் அணிந்து, ஒரு பெரிய ஒப்புற்ற புத்தகத்தையும் பக்கத்தே திருக்கரத்தில் தாங்கிக் கொண்டவரானார்.

மிக வெளுத்த நரையும் திரைந்த கபோலமும் இருமுகின்ற மார்பும் ஒரு புறம் சரிந்துள்ள கோவண ஆடையும் தலை நடுக்கமும் மேலாடை தாங்கிய திருத்தோளும் பூணுல் கிடந்து அசையும் திருநீறு துதையப் பூசிய மார்பும் நிழல் விளங்க விரிந்த ஓர் தனிக்குடையும் தண்டு ஊன்றிக் கவிழ்ந்து அசையும் மேனியும் உடையரான வேடத்தைத் தாங்கினார்.

மூப்பினாள் முழுதும் பழுத்த அந்தணராகி மீனாட்சியம்மை நித்த மணாளர் நிலம் தோய வந்தார். பல நாட்கள் உணவின்றி வருந்தும் இரும்பசி உடையராகக் காணப்பட்டார். முதிய அந்தணர் வருந்தி வாட்ட முற்று வந்தார். கௌரி தனித்திருக்கும் இல் முன் வந்து நின்றார். கௌரி அந்தணரைக் கண்ட மாத்திரத்தில் அளவு கடந்த அன்பு மீதுாரப் பெற்றாள். சிவவேதியரைச் செம்மையாக அமர ஆசனம் அளித்தாள். பின்னர் பார்பனரைப் பரவிப் பணிந்து பக்கலாகப் பவ்வியமாக நின்றாள். முனிவரைப் பார்த்து முறுவலிப்புடன் இருந்தாள்.

"இந்த இடத்தில் இந்த வேளையில் சிவபொருமானைத் தரிசனம் பண்ணுவதற்கு முன்பு நான் என்ன மாதவஞ் செய்தேனோ. என்றுரைத்துக் கௌரி பரவசப்பட்டாள்.

"பெண்ணே! பசிப்பிணி மிகுதியினால் உன்னிடத்தில் வரப்பெற்றேன்" என்றார் முனிவர்.

அது கேட்டுக் கௌரி, “பெருமானே! நமஸ்காரங்கள் எல்லாரும் இல்லைப் பூட்டிப் புறமே போய்விட்டார்கள்” என்றாள்.

அந்தணர் கௌரியின் முகத்தைப் பார்த்து அருளிச் செய்வார்.

மகளே! உனது கையினால் கதவுப் பூட்டைத் தொட்டுவிடு. உடனே பூட்டு நெகிழ்ந்து விடும். நீ கதவைத் திறந்து விரைவாக உணவு சமைப்பாய் என்று அந்தணர் எடுத்து இயம்பினார்.

உமாதேவியாருடைய திருவடியில் அன்பு செய்யும் கௌரியும் முனிவர் மொழிந்தவாறு வாயில் கதவைத் திறந்தாள். அடுக்களையினுள் நுழைந்தாள். ஆவலோடு அந்தணருக்கு அமுது ஆக்கினாள். சமையலானதும் தவக்கொழுந்து போன்ற கௌரி அடுக்களையிலிருந்தும் வெளியே வந்தாள். தனது தளிர் போலும் கையில் கமண்டலத்தில் நீர் ஏந்தி வந்தாள்.

“ஐயனே! திருவமுது செய்வதற்கு எழுந்தருளுங்கள்” என்று அழைத்தாள். அந்தணரும் அமுது செய்ய அவ்வாறே எழுந்தருளி வந்தார். கௌரி அந்தணருடைய திருவடிகளை நீரினால் விளக்கினாள். அந்தப் புனித நீரைத் தனது சிரசின் மீது கௌரி தெளித்துக் கொண்டாள். அப்புனித தீர்த்தம் பாசமாகிய மயக்கத்தை விளைக்கும் மலவிருளை விலக்க வல்லது. கௌரி அந்தணரை அழைத்துச் சென்று ஆசனத்தின் மேலாக அமரச் செய்தாள்.

பெருமலரால் அந்தணருடைய நறுமலரடிகளை அருச்சனை புரிந்தாள் கௌரி. நல்ல உண்கலத்தைத் திருத்தி முன்னே வைத்தாள். முல்லையின் முகை போன்ற பாற் சோற்றை அந்தணருடைய உண்கலம் மீது வெள்ளிமலை போற் படைத்தாள். பருப்புக் கறியினை மலையின் முதுகிலுள்ள பொன்முடி போலப் பொலிவித்தாள். பல்வேறு பொரியல் கறிகளையும் சூழும் குலமலை போலச் சோடித்தாள். ஏனைய பலவேறு சிற்றுண்டிகளையும் வகை வகையாக வைத்தாள்.

கௌரியினுடைய சிவந்த வாய் அடிக்கடி இனிய மொழி அமுதினை அந்தணருடைய செவியில் ஊட்டியது. வளைக்கை அறுசுவை உண்டியை வாயில் உண்பித்தது. வயது முதிர்வினால் தளர்ந்த திருமேனியை உடைய அந்தணர் சுவைத்துச் சுவைத்து உண்டருளினார். அந்தணர் உணவிற்குப் பின்னர் முனிவர் தேவ அமுதம் உண்டவர் போலானார். முதுமை அகன்றார். மதனவேல் காமுறும் காளைப் பருவத்தினரானார். கண்டார் மயங்கும் மதன வேளாக கௌரி முன் வந்து உட்கார்ந்தார் அந்தணர்.

இப்போது முனிவர் அணிந்த வெண்ணீறு கலவைச் சாந்தாகக் காட்சி தந்தது. உருத்திராக்க மணிகள் உருமாறி பொன்னாபரணங்களும் மணிகள் அழுத்திய குண்டலங்களும் கடகங்களுமாகக் கவின் காட்டியது. முதுமை முன்னோட எழில்மிகு ஏந்தலானார் அந்தணர்.

கற்புநெறி கடவாப் பூங்கொம்பு போன்ற கௌரி முனிவரை முன்னே கண்ணுற்றாள். நெஞ்சம் நடுநடுங்கினாள். வளையல் அணிந்த கரங்களை நெருடினாள். செய்வது அறியாது மனந் திகைத்தாள். உடலம் வியர்த்தாள். அச்சங் கொண்டாள். சற்று ஒரு புறமாக ஒதுங்கி நின்றாள் கௌரி.

இது இவ்வாறிருக்க அந்த வேளை அயலூர் திருமணத்திற்குச் சென்ற மாமி மாமா மணாளன் மற்றையோர் திரும்பி வந்தார்கள். உடனே பதினாறாண்டுப் பச்சிளங் காளையாகப் பரிமளித்த பாப்பனர் ஒரு பச்சிளங் குழவிப் பாலரானார்.

நில மாமணி மிடற்று ஆலவாயான் அனைத்து உயிர்களையும் படைத்தும் காத்தும் துடைத்தும் அருளுகின்ற அம்மை அப்பரல்லவா? அப்பனுடைய திருவிளையாடலை ஆர் அறிய வல்லார்?

தெய்வ ஞானக் குழந்தையின் புறத்தே எழுதுதற்கரிய வேதச் சிலம்புகள் கிடந்து புலம்பின. அன்பர்களுடைய நெஞ்சோடையில் மலர்ந்து, சிவானந்தத்தேன் பிலிற்று வழியும் மலர் போன்ற திருவடியின் பெருவிரலைக் குழந்தை வாயில் வைத்துச் சுவைத்தது. மை ஊட்டிய கண்கள் நீர்த்துளிகளைத் துமும்பியது. குழந்தை அணையாக விரித்த ஆடையில் குழந்தை கிடந்தது. வாயினைத் திறந்து 'ஓ' வெனப் பொருமி அழத்தொடங்கியது குழந்தை.

எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத்
தலம்ப வன்பரிதய மென்னுஞ்
செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத்
தேன்றதும்பு தெய்வக் கஞ்சத்
தொழுதகுசீற் றடிப்பெரிய விரல்சுவைத்து
மைக்கணீர் துளும்ப வாய்விட்
டழுதணையா டையிற்கிடந்தா னனைத்துயிரு
மீன்றுகாத் தழிக்கு மப்பன். (திருவி-புரா)

குழந்தை தாயைப் பிரிந்த சேயைப் போலக் கதறியது. முடியில் தாங்கி ஆராய்ந்து தேடிப் பிரமன் அழவும் வேதங்கள் அழவும் அன்பினை உடைய கௌரியின் அன்பில் அகப்பட்டு வாயைத் திறந்து அணை ஆடையிற் கிடந்து அழுது அரற்றும் குழந்தையைக் கண்ணுற்றாள் மாமி. கடுப்புடன் கௌரியைப் பார்த்துக் கேட்டாள் மாமி.

"உனக்கு இம்மகவு ஏது?" என்று திருமகளுக்கு தப்பான மருமகளைப் பார்த்துக் கொக்கரித்தாள் மாமி.

"தேவதத்தன் தனது மனைவியோடும் இங்கு வந்தான். இந்தக் குழந்தையைச் சற்று நேரம் பார்த்துக்கொள்" என்று கிடத்திப் போனான். என்று சிவ அன்பைத் தவ அன்பாக ஆதரிக்கும் கௌரி சொன்னாள்.

மாமிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. கௌரி மீது மாளுச் சினம் செய்தாள் மாமி.

"என்பினை அணிந்து சுடலைப்பொடி பூசி ஆடுகின்ற உருத்திரனுக்கு அகலா அன்பு பூண்டவனுடைய மகவுக்கு நீ அன்பு பாராட்டுகின்றாய். நீயும் நமக்கு ஆகாது" என்று மாமி சீறிச்சினந்தாள்.

வைணவ நெறியைக் கைக்கொண்டு பொறுமையையும் கருணையையும் மானத்தையும் அறவே மாற்றிக் கொண்டார்கள்.

துன்பத்தால் சோருகின்ற கௌரியை மகவோடு இல்லத்தை விட்டு வெளியே துரத்திவிட்டார்கள்.

தெருவீதியை அடைந்தாள் கௌரி. தாயில்லாத பிள்ளையின் திரு முகத்தைத் தாய்ப்பாசத்தோடு பார்த்தாள். குழந்தையை மார்போடு கட்டி அனைத்து மறுகி மனம் நொந்து மாழ்கி வருந்தினாள்.

கௌரி தனது உள்ளத்தை கோயிலாக்கிக் குடியிருக்கும் மதுரை மண் சுமந்த நாயனாரை மனத்தில் தியானம் பண்ணினாள். புண் சுமந்த மேனிப் புண்ணியரை வெண்சுமந்த பெம்மானாக அகக் கண்களில் கண்டாள். தரிசித்தாள். ஆனந்தித்தாள்.

வேயுறு தோளியின் நோயறு திருமந்திரத்தை ஆறுதலாக ஓதினாள். என்ன ஆச்சரியம்! அரவனைப்பில் அமுத மகவு மாயமாக மறைந்தது. வான் வெளியில் வந்து தோற்றியது.

கௌரி ஆகாயத்தில் இடப வாகனத்தின் மீதாக சடை மருங்கில் இள மதியும் தனிவிழிக்கும் திருநுதலும் இடமருங்கில் உமையாளுமாக விடைமருகும் பொருமானைக் கண்டு வீழ்ந்து வணங்கினாள்.

மதுரை சோமசுந்தரக் கடவுள் தனது இடபபாகத்தில் அமர்ந்தருளும், உமையம்மையாருடைய திருமந்திரத்தை உச்சரித்து உருவேறப் பெற்ற கௌரிக்கு உமாதேவியாருடைய சாருபத்தைக் கொடுத்து அருளினார்.

எம்பெருமான் யாவருங் கண்டு வணங்க தேவர்கள் மலர் மாரி பொழிய இடப ஊர்தியில் கௌரியை ஏற்றிக் கொண்டு வான் வழியாக எழுந்தருளிச் சென்றார்.

புவியிலுள்ள புண்ணியசீலர்கள் வியப்பில் மூழ்கினார்கள். கண்கள் இரண்டும் களிப்பக் கண்டார்கள். இன்புற்றார்கள்.


# சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்
உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி
கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே
இப்புண்ணிய காரியத்துக்கு
ஒப்புதல் தாருங்கள்.

தொடர்புகளுக்கு:
ஆறு.திருமுருகன்
தொலைபேசி
021-222 6550

கண் வைத்திய நிபுணர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr. சிவந்தா, 021-222 3149
யாழ்.போதனா வைத்தியசாலை

# அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை

திருமதி திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்
(நோத்யோக் கனடா)

மனிதனைப் பற்றிப் பலவிதமான வரைவிலக்கணங்கள் சொல்லப்படுகின்றது. விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் சமுதாய விலங்கு சமுதாயப் பிராணியென மனிதன் அழைக்கப்படுகின்றான். மனம் எனும் அமைப்பு உடையவன் மனிதன். எனினும் அம்மனத்தை ஆள்பவனே மனிதன். மனிதப் பக்குவங்களால் நிறைந்தது மனிதம். அவற்றை விழுமியம் என்றும் சொல்வர். அன்பு, அறிவு, ஒழுக்கம், பண்பு, நாகரீகம், ஒழுங்கு, கண்ணியம், கட்டுப்பாடு, ஒருமை, மரியாதை என்பன மனித விழுமியங்கள். நன்னடை, நற்கொள்கை, நற்சிந்தனை, நற்போக்கு, நற்பேச்சு, நற்தருமம், நன்மனம், நல்முயற்சி மனிதனை உயர்த்தும். இப்படி நோக்கின் மனித பாரம்பரியங்கள் முக்கியம். கலையோடு சோர்ந்த கலாச்சாரம். கலையுணர்வு மிக்கது மனிதம். மனித அடையாளங்கள் யாவர்க்கும் பொது. மரபு சிறப்பு இன்றைய மானுடம் தனது தடயங்களை இழக்கக் காணலாம். வன்முறைக் காலாச்சாரம், துப்பாக்கி, அரிவாள் நாகரிகம், வல்லின ஆண் பெண் உறவு போன்ற மனிதம் சாராத நடைமுறைகள் மலிந்து போயின. இம்மனிதம் நேயத்தோடு, சத்திய வேட்கையுடன் நேர்மை, நீதியைப் பேணப் பழக வேண்டும். உயர்ந்ததில் உயரிய மனிதத்துக்கு மதிப்புண்டு. மதிக்கப்படுபவனவே மனிதன். இதயசுத்தி, பயமின்மை, செயற்திறன் விழுப்பமானவை. ஜீவராசிகள் முழுமையுமே. இனப்பொருக்கம், இனவிருத்தி யுடையன. ஆண் பெண் உறவை இணை விழைச்சு என அழைப்பர். முட்டையில் இருந்து பார்ப்பு வெளிப்படும், மிருகங்கள் தாய்வயிற்றில் உருவாகின்றன. மனிதமும் மாதா வயிற்றில் உருவாகின்றான். காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம். இன்று ஓரினச் சேர்க்கை, விவாகம் அங்கிகாரம் பெற்றிருக்கிறது. மேற்கு நாடுகளில், தமிழர் பாரம்பரியம் (ஈழத்தில்) ஒருவனுக்கு ஒருத்தியென்ற வரையறையுடையது. மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்பது பார்வின் தியறி, தாய்லாந்து வாலில்லாக்குரங்கு சிவாங் என அழைக்கப்படும். இக்குரங்கு ஏக பத்தினி விரதம் உடையது. இந்த வகைக் குரங்குகள் ஒருமுறை சோடியைத் தேடினால் சாகும் வரை வேறு சோடிகளைச் சேர்ப்பதில்லை. ஒருவனுக்கு ஒருத்தியென்ற மனித தாம்பத்தியம் மேலானது. எல்லாப் பெண்களையும் விவாகம் செய்ய முடியாது. அதற்கான வரன்முறை காலங்காலமாக மேற் கொள்ளப்படுகிறது. சின்னவீடு, மறுமணம் வடவீழத்தில் நடைமுறையில் இல்லை. மாமியார், நாத்தனார், மருமக்கள் தலையீடு தென்னகத்திற் கூட, காதல் இருவர் கருத்தொருமித்ததே இல்லறம். இல்லறம் அல்லது நல்லறம் இல்லை. இறையோடியைந்த இன்பம், இன்பத்தோடியைந்த வாழ்வு மேன்மையானது. இதுவே ஆன்மீகத்தின் எழுவாய். அங்கீகாரம் பெற்றது இதைச் சுந்தரர் தமிழிற் காணலாம்.

இறைகளோடிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு.
பறைகிழித்தனைய போர்வை பற்றியான் நோக்கினேற்குத்

திருமுறை 7: 8.1

இந்த இன உறவுக்கு கட்டுப்பாடு அவசியம், அ∴து கற்போடு இணைந்தது. இதை நிறையெனத் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற சங்க இலக்கியங்கள் பேசும். நிறை நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்துதல்-பரிதியார். கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்றார் ஔவை. இந்த இன்முறையே சந்ததிப் பெருக்கம். மக்கட் செல்வம் இல்லறத்தின் சிறப்பம்சம். சந்ததிக்கழகு வந்தி செய்யாமை.

இந்தக் கூட்டுக் குடும்பம் வளர்ந்து சமுதாயமானது. இப்படி இனசனம் வளர்ந்து மனிதக் கூட்டம் உருவானது. இந்த இணைப்பால் வந்ததே தாய், தந்தை, சகோதரம், மாமன், மாமி, பெரியப்பா, சித்தப்பா, சித்தி, பெரியம்மா, மச்சான், மச்சி போன்ற உற்றார் உறவினர், இந்தப் பாலுறவு காதலால் ஏற்படலாம். பெற்றோரின் ஒழுங்காலும் அமையலாம். இந்தத் தாய்மை தலையாய பாந்தவ்யம் நிறைந்தது. அம்மையப்பன் என இறைவனை மனிதம் அழைத்தது. இல்லறம் கண்ட போது பெற்ற குழந்தைகள் பெற்றோரை அம்மா, அப்பா என அழைத்தது. திருவாசகப் பெருநூல் அம்மையே அப்பா என இறைவனை உறவுமுறை கொண்டாடுகிறது. சம்பந்தக் குழந்தைக்கு அம்மையப்பனாகக் காட்சி தந்தான் தோணியப்பர். அப்பர் கூட அப்பன் நீ அம்மை நீ என்று பாடினார். தாய்கோழி, தாய்ப்பசு, தாயாடு என்ற வழக்காற்றில் தாய்மை புலனாகிறது. தெய்வத் தாயாகப் போற்றப்படுகின்றாள் மனிதத்தாய். மன்பதை பேணி மனிதத்தை வளர்ப்பவளும் அவளே. மானம் காப்பவள், மரியாதை பேணுபவர் அன்னை. இரக்கம், கருணை, அன்பு அவள் பண்புகள். இப்பாரம்பரியத்திலே கால்விட்ட வெவ்வேறு வழக்காறுகள் உண்டு.

தாய்நாடு, மாத்ருபூமி, தாய்மொழி, தாயுள்ளம், பெற்றமனம், தாயபாகம், மாதாமகர், தாயகம், தாய்ச்சமயம் போல்வன தாயோடு தொடர்பான பிரயோகங் கள். தாய் இன்றிச் சேய் இல்லை. வாத்ஸல்யம் நிறைந்தது தாய்மை. கருணை பொழிபவள் அம்மா. இவளை ஆய், யாய், ஆயி, அம்மா, ஆத்தை, ஆச்சி, ஆத்தாள் என்று அழைத்தனர். ஆத்தாளை அபிராமவல்லியை எனப் பட்டர் பாடுகிறார். இந்த இரத்த உறவு, இன்று மம்மா, மம்மியென வேற்று மொழி வயப்பட்டுப் போனது. அழகிய தமிழ் அன்னை மொழியல்லவா, கங்கையை, பூமியைத் தாயாகவே நேசித்து கங்காமாதா, பூமித்தாய் என்போம். இங்கிலீசிலும் **motherland** என்ற வழக்காறு உண்டு. தாய்த்திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி என்று பாடியவர் பாரதி. அவரின் தாயகப் பிடிப்பு அவ்வளவு. மண் ணைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வதேன்? தந்தை இன்றித் தாய்மை ஏது? தாயின்றித் தந்தைக்கு மவுசில்லை. தாய்மை விளையத் தந்தை விதை விதையிட்டார். விச்சை இன்றியே விளைவு செய்வான். இறைவன், இறைவி அவன் வல்லமை (சக்தி) எங்கும் நிறைந்த எங்கும் தங்கியிருப்பவன் இறைவன். எனவே பாரதியின் தேசிய மனப் பான்மையில் எழுந்த எழுச்சிப் பாடல் இது.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் - வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே - அவர்
கன்னியராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே
மங்கையராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே - அவர்
தங்க மதலைகள் ஈன்றமுதூட்டித்
தழுவிய திந்நாடே - (தேசிய கீதம்)

செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. 20 செந்தமிழ் நாடு.

ஆகச் சமுக அமைப்பில் முதன்மை சான்றவர்கள் தாய் தந்தையர் என்பதை நாம் உணர வேண்டும். இதை அன்று உணர்த்தியவர் ஆசிரியர். ஔவைப் பிராட்டி அந்த மன ஓட்டத்தில். பிள்ளைகள் பெற்றவளைப் பேணிக்காக்க வேண்டுமென்ற கருத்தை, பிஞ்சு வயதிலேயே நெஞ்சிற்பாய்ச்சினாள்.

தந்தை தாய் பேண். ஆத்தி சூடி

தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
தந்தை சொன் மிக்கதோர் மந்திரம் இல்லை
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
கொன்றை வேந்தன்

திரு. வி. க அவர்கள் பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணையென்றோர் அருமையான நூல் தந்துள்ளார். அதை ஆண்களும் பெண்களும் கட்டாயம் படிக்க வேண்டும். தாயின் மகத்துவம் உணர்ந்து பெற்றவளை மதிக்க வேண்டும். கணவன் பெயரைச் சொல்ல ஒச்சப்பட்டவள் எங்கள் தாய். தாய் சேய் உறவு கொப்பூழ் உறவு. நஞ்சு கொடியோடு போராடி நம்மைப் பெற்றவள் எங்கள் தாய். முலைப்பால் உறவு நம் தொடர்பு. அவளைப் பால் நினைந்தூட்டும் தாயென்றார் திருவாசகச் செம்மல். என்றும் பிரிக்க முடியாத, வெட்டமுடியாத பாசக்கயிறு அது. இந்தப் பிள்ளையருமையையும், மாதா உதரப் பெருமையையும் திருவாசகம் பொழிகிறது இப்படி.

யானை முதலா எறும்பு ஈறாய
ஊனம்இல் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனம்இல் கிருமிச் செருவினில் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறு அலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்கதசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
போற்றித்திரு அகவல் 11-25

குழந்தைப் பேறென்பது பெண்ணுக்குப் புனர்ஜன்மம். இஃதே பார்வையில் பெரியவர் நாவேந்தர் கருவில் உருவாகும் மானிடவரலாற்றைக் கவிசெய்துள்ளார்.

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோகாரால்
மருவாகி நின்னடியே மறவேனம்மான்
மறித்தொருகாற் பிறப்புண்டேல் மறவாவண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங்கூராய்
செம்பொனே கம்பனே திகைத் திட்டேனே. திருமுறை 6:25.6

எனவே பிள்ளையருமை பெற்றவட்கே தெரியும், பெற்றோரென்றும் பிள்ளைகளின் நலனிலேயே கண்ணும் கருத்தாய் இருப்பர். ஆலமரம் முதிர அதன் அழகான விழுதுகள் அதைத் தாங்குவது போல பிள்ளைகளும் தாய் தந்தையரைச் சுமைதாங்கி போற் தாங்க வேண்டும். பெற்றோரிலே தங்கி வளர்ந்த பிள்ளைகள் முதுமையில் பெற்றோரைத் தாங்கி வாழ வேண்டும். வாழ்ந்து காட்ட வேண்டும். அவர் தம் பிள்ளைகள் அதைப் பின் பற்ற இது உதவும். (பீரம்-பால்) பீரம் பேணில் பாரந் தாங்கும் என்றாள் அன்னை. தாய்ப் பால் தான் வலிமை தந்தது. வலிமை சேர்ப்பது தாய்முலைப்பாலடா என்றான் வீரப்பாரதி. நொந்து சுமந்து பெற்று நோகாமல் ஏந்திமுலை தந்தவள் தாய். தொட்டிலும் கட்டிலிலும் தோள் மேலும் மார் மேலும் போட்டுத் தாலாட்டியவள் அன்னை. குஞ்சைக் கோழி செட்டையுள் அணைப்பது போல, அன்புச்சிறகுள் நம்மையணைத்தும் புரந்தவளும் அவளே. பஞ்சமும் பசியும் பொறுத்து பஞ்சி பாராட்டி நம்மை ஆளாக்கிய தெய்வம் அவள் தான். தாயன்பு தலையாய அன்பு, தன் நிகரற்ற அன்பு. அன்பே அவள் திருவுரு.

குழந்தையின் தந்தை இவர் தானெனக் காட்டுபவள் தாய். இறைவனைக் கூட இறைவி வழி சென்றே காணலாம். என்ற உண்மையைப் பட்டினத்தடிகள் "தாயுடன் சென்று தாதையைக் கூடி" எனப் பாடியுள்ளார். நம்மை இறைமாட்டு ஆற்றுப்படுத்தும் இராச பாதை இது தான். பெற்றோரை மதிப்பது, அவர் பேச்சைக் கணிப்பது ஏன் யோசிப்பது கூட இன்று அருகிவரக் காணலாம். இஃது சமுதாய நலிவுக்கோர் அடையாளம்.

கணவனைப் பறிகொடுத்த எத்தனையோ அன்னையர்கள் கைம்மை நோற்று வெண்டுகில் அணிந்து பச்சைப் பாலகன்களை கண்ணை இமை காப்பது போல் வளர்த்தெடுத்து, ஆளாக்கிப் பேராக்கி படிக்கப்பண்ணி பெருமைக் குரியவர்கள் ஆனார்கள். பத்துப் பிள்ளைகளைப் பெற்று ஊரறிய, பேரறிய, உலகம் அறிய உயர்த்தி விட்ட அம்மாவை-அதிலோர் பிள்ளையாதல் கவனிக்க வேண்டாமா? பிள்ளையின் குணம், போக்கு அறிந்து அதற்கிசைவாய் தன்னை வளைந்து கொடுத்து வாழ்விலும் தாழ்விலும் பங்கேற்ற அன்னை தாய்த் தெய்வமன்றோ! அவள் தான் பிள்ளையின் செவ்வியும் குணமும் தெரிந்தவள் என்பர் வள்ளலார்.

பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம்
பெற்றவர் அறிவரே யல்லால்
மற்றவர் அறியார் என்றனை
ஈன்ற வள்ளலே மன்றிலே நடிக்கும்
கொற்றவ ஓர் எண் குணத்தவ
நீ தான் குறிக்கொண்ட கொடியனேன் குணங்களை
முற்றுநன் கறிவாய் அறிந்து மென்றனை
நீமுனிவதென் முனிவு தீர்த் தருளே!

அருட்பா ஆளுந் திருமுறை 190

பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல் என்பர். பெற்ற தாயார் பிள்ளைகளின் குணங்களை அறிந்து அதற்கு இயைவாய் தன்னை வழி நடத்துவாள். ஒரு தென்னையிலே இளநீர் பிடுங்க வேண்டுமாயின் ஏறிப்பறிக்கலாம். பொருத்தமாயின் ஏணி கொண்டு ஏறிப்பிடுங்கலாம். ஆனால் தென்னை மரத்தை வளைக்க முடியாது. இளநீர்க் குலையை கயிற்றிலே தொடுத்து இறக்குவது ஒரு முறை அன்றேல். ஒரு கூடையிலே போட்டு கயிற்றின் மூலம் இறக்கலாம். போட்டால்

இளநீர் வெடித்து வீணாகும். இவ்வண்ணமே பிள்ளைகள் கெட்டுப் போகாமல் வழிநடத்துவதில் பெரும் பங்கு அன்னையின் கரங்களிலே தான் தங்கியுள்ளது. தாயைப்போல பிள்ளை நூலைப் போல சீலை என்பர். வள்ளலாருக்கு காலத்தால் முந்திய தாயுமானவரின் கருத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்போமே.

**பெற்ற வட்கே தெரியும் அந்த வருத்தம்; பிள்ளை**
**பெறாப் பேதை அறிவளோ? பேரானந்தம்**
**உற்றவர்க்கே கண்ணீர், கம்பலை உண்டாகும்,**
**உறாதவரே கல்நெஞ்சம் உடையர் ஆவார்.** பெற்றவட்கே.

பெற்றவர்க்கே- பிள்ளை பெற்றவர்க்கே, அந்த வருத்தம் - அந்த கருவுயிர்க்கும் துன்பம் தெரியும். தெரிந்திருக்கும்; பிள்ளை பெறாப்பேதை- பிள்ளையைப் பெறாத பேதைப் பெண், அறிவாளோ- அந்த வருத்தம் அறிவாளோ? அறியாள்- அது போல பேரானந்தம்- பெரிய சிவானந்தம், உற்றவர்க்கே- அனுபவிப்பவர்க்கே, கண்ணீரும், கம்பலை-நடுக்கம், உண்டாகும்- உலவாகும். உறாதவரே- ஆனந்தம் அடையாதவரே, கல்- கல் போன்ற,நெஞ்சம்- மனதை, உடையர் ஆவர்-உடையவர்கள் ஆவார்கள்.

மலடியறிவாளோ பிள்ளைப் பேற்றின் உண்மை என்பது பழமொழி. குழந்தை பிறந்த போது கண்ட நோக்காடு-அந்த நினைவு வரும் போதெல்லாம் உணர்வு பூர்வமாக உண்டாவது இயல்பு. இ∴தே போன்றது தான் சிவானந்த அனுபவமும்.(மாங்காயை நினைக்கும் போதெல்லாம் வாய் ஊறுவது போல)

**தாயினும் இனி யநின்னைச்**
**சரண் என அடைந்த நாயேன்**
**பேயினும் கடையன் ஆகிப்**
**பிதற்றுதல் செய்தல் நன்றோ**
**தீயிடை மெழுகாய் நொந்தேன்**
**தெளிவு இலேன் வீணேகாலம்**
**போயினது ஆற்றகில்லேன்**
**பூரணா னந்த வாழ்வே.** 36 கற்புறுசிந்தை 7

"தாயினும் சாலப்பரிந்து" என்கிறார் மாணிக்கவாசகர். இறைவனைத் தாயின் அன்போடு ஒப்பிட்டுப் பாடுகின்றார் தாயுமானவர். தாயர் கர்ப்பத்தூடு அன்னமும் தண்ணீரும் தந்து அருளும் நேய உனையாரே நினையார் பராபரமே.

பராபரக்கண்ணி 135

(இ-ள்) தாயின் வயிற்றினுள் வாழ்கின்ற காலத்தும் அன்னத்தினையும் தண்ணீரையும் தந்தாண்ட நேயனே! தேவரீரை நினையாதவர் யாரே! (ஒருவரும் இல்லையென்றபடி) கல்லினுட் தேரைக்கும், கருப்பையுள் முட்டைக்கும் புல்லுணவே தந்து போற்றும் தயாநிதி மாதா உதரத்துக்குள் உறங்கும் பச்சைப் பாலர்க்கும் ஆருமறியாமல், அமுதூட்டி வளர்க்கிறான். இந்தக் காட்சி திரி கூடராசப்பக் கவிராயரின் அகக் காட்சியில் தென்பட்டுக் கவிதையாக வெளி வருகிறது.

**ஈயறியாப் பூந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே**
**காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் தனிக்கொழுந்தே**
**தாயறியாக் கருவில் இருந்து அமுதூட்டும் தனித்துணையே**
**நீயறியாப் பொருளுண்டோ நிகிலபுரம் பரமமூர்த்தி**
குற்றாலத்தல புராணம்

பெற்றவளின் பொறுப்புணர்வையும் கடமையாற்றும் பக்குவத்தையும், மனித நேய விழுமியங்களையும் பார்த்தோம். குடியிருந்த கோயிலான தாயுள்ளம் வருந்தாமல் பார்ப்பது மக்கட் கடமையாம் தாயை இழந்த குழந்தைகளைத் தாபரிப்பதும் சமுதாய நோக்கமாய் அமையவேண்டும். எம் தாய்க்குலம் ஒருவர் பின் ஒருவராய் நம்மைவிட்டுப் போய்விட்டனர். எங்கே? என்னைப் பெற்றெடுத்த அன்னையாகியவள் என்னை இவ்வுலகில் விடுத்துத் தன் தாயிடம் சென்றாள். அவள் வழிப் பலதாயர் நம்மை விட்டும் போய்விட்டனர். எனவே இவ்வுலக இயல்பை எண்ணி எண்ணி எம் கடமைகளை முன்னெடுத்துச் செல்வோம். ஆக அன்னையைப் போலொரு தெய்வமில்லை. அவள் அடிதொழ மறுப்பவர் மண்ணில் மனிதரில்லை. துன்பமும் துயரமும் ஏற்றுக் கொண்டு எம்மை சுகம் பெறவைத்திடும் கருணை உள்ளம். அவளை நாம் வாழும் போதும், அவள் வாழும் போதும் பேணுவோம். இறந்த பின் மோட்ச விளக்கேற்றியும் மோட்ச அர்ச்சனை பண்ணியும் பயனில்லை. தாய்த்தினம் கொண்டாடமுன் உயிர் வாழும் அன்னையரைப் புரப்போம் வாரீர்.

*** *** ***

# பரசமய கோளரியைப்பாடி மகிழ்வோம்

சைவம் மலர்ந்திடச் சமணரை வீழ்த்தி
தனித்தமிழ் நெறிவாழ
தாண்டக வேந்தன் தன்னொடும் கூடி
தமிழ்மறை மிகுபாடி
கைவ ருந்திடத் தாளம் இட்டவர்
தாளமது பெற்றும்
கருணையி னாலுயர் சிவிகையில் ஏறி
கவின்பெறு நிலைகூட்டி
மைவளர் கண்டன் மகிமையி னாலுயர்
மாரிவ ளம்கூட்டி
மறுவில்லாக் காசினைப் பெற்றே பசிப்பிணி
தனையும் விரைந்தோட்டி
தையலர் கைத்தலம் பற்றிய வேளையே
தாரும் முத்தியென
தருணம றிந்துயர் சிவனடி சேர்ந்தநற்
திருவடி வாழியவே.

அன்னையு மையவள் ஞானப் பாலினை
அணைத்தே ஊட்டியதால்
ஐயனும் பெற்ற நயன பரிச
வாசக தீட்சையினால்
கன்னித் தமிழிசை கவின்பெற மொழிந்தே
காட்டிய அற்புதங்கள்
காசினி மீதினில் மேன்மைப டைத்திடும்
உன்னதநி லையறிந்தே
சென்னிகள் நிமிர்த்தி நம்தமி ழோங்க
செழிப்புறும் நிலைகூட
தேடியே கேது தொழுதப தியிதன்
மகிமையும் மலர்ந்தாட
சின்னமெ னத்திகழ் கோணேச் சரமொளி
பெற்றுமி ளிர்ந்ததம்மா
சீர்வளர் பாவ நாசச் சுனையும்
உயிர்த்தொளி பெற்றதம்மா.

வெண்ணீறு பூசிய மேனியில் வேதனை
இல்லையென் றேபாடி
வேயுறு தோளி பங்கனைப் பாடி
வேதனை தனையோட்டி
மண்மகிழ் வண்ணம் பற்பல பாடி
மாசறு நிலைகூட்டி
மானினேர் விழியாள் மங்கையற் கரசிதன்
மனத்துயர் தனையோட்டி
மாண்புறு செந்தமிழ் மாலைகள் பாடி
மண்ணின் வளம்பாடி
மதிதவழ் செஞ்சடை நாதன ருளொளி
வண்ணம் மிகுபாடி
கண்மலர் திறந்தெமைக் காத்தருள் நாயகன்
கறைகண்டன் புகழ்பாடி
காத லாகிப் பாடியும் இறையடி
சேர்திரு வடிவாழி

கவியாக்கம்: **சு. குகதேவன்**, தெல்லிப்பழை

# மெய்ப்பொருள் நாயனார்

க. சிவசங்கரநாதன் அவர்கள்
சரசாலை

மலையமான் நாட்டிலே திருக்கோவலூரிலே ஓர் இராசா இருந்தார். அவர் சிவனடியாரிலுஞ் சிவவேடத்திலும் அதிக பக்தி உடையவர். விபூதி உருத்திராக்கம் முதலிய சைவ சிவவேடங்களையே மெய்ப்பொருள் என்று மதிப்பவர். அதனால் அவருக்கு மெய்ப்பொருள் நாயனார் என்று பெயரானது. அவர் தமது இராச்சியத்தை நீதி தவறாது ஆண்டு வந்தார். சிவாலயங்களில் பூசை திருவிழாக்களை ஒரு குறைவுமின்றி நடத்தி வந்தார். சிவனடியார்கள் அவரிடம் போனால் அவர்களை அன்பாய் உபசரித்து அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து வந்தார்.

இப்படி நடக்கின்ற காலத்திலே முத்தி நாதன் என்னும் அரசன் அந்த மெய்ப்பொருள் நாயனார் அவர்களோடு சண்டை செய்து பலமுறை தோற்றுப் போனான். அவன் நாயனாரைச் சண்டை செய்து வெல்லுதல் இயலாதென்பதைக் கண்டு அவரை வஞ்சனையால் வெல்வதற்கு முயற்சி செய்தான். நாயனார் சிவனடியாரிலும் சிவவேடத்திலும் அளவில்லாத அன்புள்ளவரென்பதை முத்தி நாதன் அறிந்திருந்தான். அவன் ஒரு நாள் விபூதியை உடம்பு முழுவதும் பூசிச் சடைகளை முடித்துக் கட்டிக் காவியுடை அணிந்து ஒரு புத்தகப் பையுள்ளே ஓர் ஈட்டியை மறைத்து வைத்துக் கொண்டு நாயனாருடைய அரண்மனைக்குப் போனான். மாளிகையின் காவற்காரர் அவனைச் சிவனடியார் என எண்ணி உள்ளே செல்ல விட்டார்கள். கடை வாயிலில் நின்ற தத்தன் என்னும் சேவகன் சுவாமி இராசா இப்பொழுது நித்திரை கொள்கின்றார். எழும்புஞ் சமயம் அறிந்து போதல் வேண்டும் என்றான். அதற்கு முத்தி நாதன் நான் அவருக்கு ஞானநூல் படிப்பிக்கப் போகிறேன் என்னைத் தடுக்க வேண்டாம் எனக் கூறி உள்ளே போனான். அங்கேயிருந்த நாயனாரின் மனைவியார் அவரை எழுப்பினார். அவர் எழுந்து அவனை சிவனடியார் என்று நினைத்துக் கும்பிட்டு "சுவாமி இங்கே எழுந்தருளிய காரணம் யாது எனக் கேட்டார். அதற்கு முத்தி நாதன் வேறு எவரிடமும் இல்லாத ஓர் ஆகமத்தை உமக்குப் போதிப்பதற்காக கொண்டு வந்தேன் என்றான்.

நாயனார் மிக மகிழ்ந்து அடியேனுக்கு அதைப் போதித்தருளல் வேண்டும் என சொல்லிச் சிவனடியாரை ஆசனத்தில் அமர்த்தி தாம் கீழே இருந்தார். நாயனார் முத்தி நாதனை வணங்கிக் கொண்டிருக்கையில் அவன் புத்தகத்தை எடுப்பவன் போல் தான் மறைத்து வைத்திருந்த ஈட்டியை எடுத்து அதனால் நாயனாரைக் குற்றினான். அதை அறிந்த தத்தன் ஓடி வந்து தன் கைவாளினால் பாதகனாகிய முத்தி நாதனை வெட்டப் போனான். அப்பொழுது மெய்ப்பொருள் நாயனார் தத்தனைப் பார்த்து தத்தா இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஒரு துன்பமுஞ் செய்யாதே என்றார்.

தத்தன் நாயனாரைப் பார்த்து சுவாமி அடியேன் செய்யக் கூடிய ஏவல் யாது? என்றான். நாயனார் வழியிலே இவருக்கு ஒருவரும் துன்பம் செய்யாதவாறு இவரை அழைத்துக் கொண்டு போய் நம் ஊரெல்லையில் விட்டு விட்டு வா என்றார். சிவனடியார் ஓர் இடையூறுமின்றிப் போய் விட்டார் என்ற செய்தி அறிய வேண்டும் என விரும்பிய நாயனார் உயிருடன் இருந்தார். முத்தி நாதன்

இராசாவைக் கொன்ற செய்தியை அறிந்த மக்கள் முத்தி நாதனைக் கொல்ல வந்தார்கள். ஆனாலும் தத்தன் இச்சிவபக்தனுக்கு ஒரு துன்பமுஞ் செய்யக் கூடாதென இராசா கட்டளையிட்டார் என்று சொல்லி அவர்களைத் தடுத்தான். தத்தன் முத்தி நாதனை கிராமத்தின் எல்லையில் விட்டு விட்டு நாயனார் முன் வந்து நின்று சுவாமி சிவபக்தருக்கு இடையூறு ஒன்றும் நிகழாதபடி கொண்டு போய் விட்டேன் என்றான். அப்போது மெய்ப்பொருள் நாயனார் இன்றைக்கு நீ செய்த உபகாரத்தை வேறு யார் செய்ய வல்லவர் என்று சொல்லித் தத்தனை அன்புடன் பார்த்தார். பின்பு அவர் தம்முடைய குமாரர்களையும் மந்திரிமார் களையும் அழைப்பித்தார். வேத ஆகமங்களிற் சொல்லியபடி விபூதிமேல் வைத்த அன்பை வளர்க்கும் வண்ணம் அவர்களுக்குப் போதித்து நடராசப் பெருமானைத் தியானம் பண்ணினார். உடனே நடராசப் பெருமான் தோன்றி அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினார். இந்த மெய்ப் பொருள் நாயனார் விபூதி மேல்வைத்த அன்பு நம்பிக்கையும் நடராசப் பெருமான் மீது வைத்த நம்பிக்கையையும் சிந்தித்து வாழ்வோமாக.

❋❋❋ ❋❋❋ ❋❋❋

இறைவனுக்குச் செய்யப்படும் பதினாறு வகை உபசாரங்களில் ஒன்று தீபாராதனை. தீபாராதனைக் காலத்தில் தெய்வங்கள் பலரும் தீபங்களில் அமர்ந்து இறைவனை தரிசித்துச் செல்வதாக ஐதிகம்.

தீப வழிபாட்டில் பல வகை தீபவரிசைகள் காட்டப்படுகின்றன.

நட்சத்திர தீபம் காட்டப்படும்போது நட்சத்திரங்கள் இறைவனை வழிபட்டு ஒளிபெறுகின்றன. ஒன்பது தீபங்கள் நவசக்திகளைக் குறிக்கும். ஏழு தீபங்கள் சப்த மாதர்களைக் குறிக்கும். பஞ்ச தீபங்கள் நிவர்த்தி கலை, பிரதிட்டா கலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தி அதீதிகலை என்ற ஐந்து கலைகளைக் குறிக்கும். மூன்று தீபம் சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று ஒளிகளையும், ஒற்றைத் தீபம் சரசுவதியையும் குறிப்பதாகச் சொல்வர். தீபாராதனை நடக்கும் பொழுது இறுதியாக கும்பதீபம் காண்பிக்கப்பெறும். கும்பதீபம், சதாசிவ தத்துவத்தைக் குறிக்கிறது.

தீபாராதனை செய்யும் பொழுது மூன்று முறை காட்டுவார்கள். முதன் முறை உலக நலத்திற்காகவும், இரண்டாவது முறை ஊரில் உள்ள மக்கள் நல்வாழ்விற்காகவும் மூன்றாம் முறை ஐம்பெரும் பூதங்களால் இடையூறுறின்றி நல்லது நடக்க வேண்டும் என்பதற்காகவுமாக மும்முறை தீபம் காட்டுவர்.

நன்றி - பக்தி மலர்

*** *** ***

தீபங்களில் 16 வகைகள் உள்ளன. அவை தூபம், மகா தீபம், அலங்கார தீபம், நாக தீபம், விருஷப தீபம், புருஷாமிருக தீபம், ஓல தீபம், கமடதி தீபம், கஜதீபம், வியாளிர தீபம், சிம்ம தீபம், துவஜ தீபம், மயூர தீபம், ஐந்தட்டு தீபம், நட்சத்திர தீபம், மேருதீபம் ஆகியன. இவற்றுள் சிவனுக்குரிய மகா தீப விழாவை உமாதேவியே தொடக்கி வைத்ததாக புராணம் கூறும்.

மகாதீபம் ஏற்ற 3000 கிலோ பசுநெய், 7 அடி உயரம் கொண்ட பெரிய செப்புக் கொப்பரை, திரியாகப் பயன்படுத்த சுமார் 1000 மீற்றர் காடாத் துணி, மற்றும் 2 கிலோ கற்பூரம் பயன்படுத்தப் பெறுகின்றன. தொடர்ந்து 11 நாட்கள் இந்த மகாதீபம் மலைமீது ஒளி வழங்கும். திருவண்ணாமலை மட்டுமல்ல, மலைமீது கோயில் கொண்டுள்ள அனைத்து முருகன் ஆலயங்களிலும் கூட மகா தீப விழா நடைபெறும். தந்தைக்கும் மகனுக்கும் நடைபெறும் மகாதீப ஒளிக் காட்சியைக் காணும் மக்கள் வாழ்வில் நலமும் வளமும் தழைப்பது உறுதி.

# தானமே தவமாகும்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பான வாழ்த்து!

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். அன்னதானம் மிகவும் சிறந்தது தான் என்பதை விளக்கும் கதை ஒன்றைக் கேளுங்களேன். இது உண்மைக் கதை. கடந்த 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்தது. புதுச் சேரி என்றொரு மாவட்டம் தமிழ் நாட்டிலே உள்ளது. அந்த புதுச்சேரிக்குப் பக்கத்திலே இராமநாதபுரம் என்ற ஊரிலே சிவராமகிருஷ்ணன் என்ற வள்ளல் ஒருவர் வாழ்ந்து வந்தார். அன்னதானம் செய்வதில் அவருக்கு மிகவும் விருப்பம். ஒவ்வொரு நாளும் பகல் உணவாக ஒரு பெரிய பாத்திரத்தில் சாம்பார் கலந்த சாதமும் (குழையல்) இன்னொரு பெரிய பாத்திரத்தில் தயிர்ச் சாதமும் தமது வீட்டின் தலை வாசலில் வைப்பிப்பார். திண்ணையில் அவர் உட்கார்ந்து கொள்வார். வழியில் போகின்ற எல்லோரையும் கூப்பிட்டு சாப்பிடப் பண்ணுவார். இராமநாதபுரத்திலும் அதைச்சூழவுள்ள கிராமங்களிலும் உள்ள ஏழைகள் ஒவ்வொரு நாளும் சிவராமகிருஷ்ணனுடைய வீட்டு வாசலிலே கூட்டம் கூட்டமாய் போய் நிறைய உணவு பெற்றுச்சாப்பிடுவார்கள். சிவராமகிருஷ்ணனும் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பார்.

ஒரு நாள் சிவராம கிருஷ்ணனுக்கு முன்னால் ஒரு வயோதிப சாது உட்கார்ந்து இருந்தார். எல்லோரும் சாப்பிட்டு சென்ற பிறகும் அந்த சாது அங்கேயே உட்கார்ந்து இருந்தார். இதைக் கண்ட பணியாளர்கள் அவரைச் சாப்பிட அழைத்தார்கள். அவரோ தலையசைத்து மறுத்துவிட்டு சிரித்துக் கொண்டிருந்தார். இதைக் கண்ட சிவராமகிருஷ்ணன் “பெரியவரே! நானும் நீண்ட நேரமாய்ப் பார்க்கிறேன் உங்களுக்கு பசிக்கவில்லையா? அல்லது வேறு ஏதாவது வேண்டுமா? எதற்காக இங்கே வந்து சும்மாய் இருக்கிறீர்கள்?” என்று கேட்டார். அந்த பெரியவர் சிரித்தார். “சிவராமகிருஷ்ணா! எனக்கு ஒன்றும் வேண்டாமப்பா. உனக்குத்தான் ஆசை ஒன்று உண்டு. அது நிறைவேறவில்லையே என்று ஏக்கமும் உண்டு. அப்படியல்லவா” என்று கேட்டார். சிவராமகிருஷ்ணன் திகைத்துப் போனார். “ஐயா! எனக்கு என்ன ஏக்கம் என்று சொல்லுகிறீர்கள்?” என்றார். “நீயே சொல்! இங்கே பலர் வந்து சாப்பிடும் போது நீ உனக்குள்ளே தினந்தோறும் நினைத்து பெருமூச்சு விடும் காரணம் என்ன?” என்று பெரியவர் கேட்டார்.

சிவராமகிருஷ்ணனும் “பெரியவரே! எத்தனையோ வருடமாக நான் இந்த அன்னதானத்தை செய்கிறேன். நான் செய்யும் இந்தத் தானம் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டது என்றால் இங்கே தேவர்களோ, சித்த புருசர்களோ, வந்து இந்த அன்னத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி யாராவது வருகிறார்களா என்றுதான் கவனித்தேன். யாருமில்லை எனது அன்னதானம் சிறந்தது அல்ல என்று நினைத்து பெருமூச்சு விடுவேன். இது உங்களுக்கு எப்படி தெரியும்? என்று பயபக்தியோடு கூறினார். “உன் அன்னதானம் சிறந்ததுதான். இங்கே நீ நினைக்கிறபடி சித்தர்களும், தேவர்களும் வருவதுண்டு. உன் கண்ணுக்கு தெரிவதில்லை ஆகவே வருத்தப்படாதே” என்றார். அந்த பெரியவர் “உங்கள் பேச்சை நான் எப்படி நம்புவேன்? என் கண்களால் கண்டால் ஒழிய எதையும்

நான் நம்பமாட்டேன்" என்றார் சிவராமகிருஷ்ணர். "உன் ஊனக் கண்ணால் அவற்றை நீ பார்க்க முடியாதே பார்த்தால் கண் குருடாகி விடுமே" என்றார் பெரியவர்.

கண் பார்வை இழந்தாலும் பரவாயில்லை. நீங்கள் சொல்வது உண்மையென்றால் அதை நீங்கள் நிருபிக்க வேண்டும் என்று சவால் விட்டார் சிவராமகிருஷ்ணர். தான் மறுநாள் வருவதாகக் கூறிவிட்டு பெரியவர் போய்விட்டார். அடுத்த நாள் பகல் கூட்டமாக பலர் சாப்பிட வந்து கொண்டிருந்தார்கள். வரிசையாக நின்று இலையிலே சாதத்தை பெற்றுக் கொண்டு போகிறவர்கள் இடையே பெரியவர் ஒரு இடத்தை சுட்டிக் காட்டினார். மேனி முழுவதும் ஒளி வீசும் விசித்திரமான தேவ உருவங்கள் இரண்டை சிவராமகிருஷ்ணர் கண்டார். கை கூப்பித் தொழுது கண்ணீருடன் வணங்கினார். அடுத்த கணம் அவருடைய கண்கள் வேறு ஒன்றையும் காணமுடியாமல் குருடாகிப் போகின. தான் கண்ட காட்சி தந்த அதிர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் முழுகிய சிவராமகிருஷ்ணன் இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஒருநாள் திடீர் என்று வந்த அந்தப் பழைய பெரியவர், "சிவராமகிருஷ்ணா! என்னைத் தெரிகிறதா?" என்று வாசலில் நின்று கூவியதைக் கேட்டு கண் திறந்து அவரைப் பார்த்தார். ஆம் அவருக்கு மீண்டும் கண்பார்வை வந்து விட்டது. மன நிறைவோடு பலகாலம் அன்னதானம் செய்து வாழ்ந்தார் சிவராமகிருஷ்ணர்.



# காவுண்டு வினையில்லை

இராகம்: மகாநந்தி தாளம்: திரிஸ்ரம்

காவுண்டு வினையில்லை கையுண்டு பயமில்லை
கண்ணுண்டு குறைவில்லை மனமே - மூன்று
கண்ணுண்டு குறைவில்லை மனமே - ஈசன்
கண்ணுண்டு குறைவில்லை மனமே

பக்தி செய்யும் சுந்தரனின் பாட்டில் மோகம் கொண்டு சொக்கிப்
பரவையுடல் தீர்த்து வைக்கும் தூதனாய் - அன்று
பாதம் நோக நடந்து வந்த (காவு)

மறையவர்குலச் சிறுவன் மார்க்கண்டனை காப்பதற்கே
மனமிரங்கி இலிங்கத்தினின் மாயமாய் - வந்து
மறலிமாள உதைத்த செம்பொற் (காவு)

வந்தியம்மை தந்தபிட்டை வாங்கியுண்டு மண்சுமந்து
வைகையின் பெருக்கடைக்கும் கூலியாய் - அன்று
விந்தை செய்ய வந்த நல்ல (காவு)

குருந்தமர நீழலின்கண் குருவடிவாய் வந்தமர்ந்து
குதிரைவாங்க வந்த வாதவூரனின் - சிரசில்
குரை கழலைச் சூட்டியாண்ட (காவு)

சிற்சபையில் ஆடுகின்ற சேவடியை நெஞ்சில்வைத்து
பக்தியாய் தேவாரம் பாடிப் பரவினால் - என்றும்
பத்திதொடாறு செல்வம் நல்கும் (காவு)

தேவாரம் நடராஜன்

தொடர் - 7



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

## வெள்ளியம்பலத்தில் திருக்கூத்தாடிய கதை:

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்தபின்னர், பிரமா முதலிய தேவர்களைப் பார்த்துப் போசனம் செய்ய வாருங்கள் என்று அழைத்தார். அவர்கள் விரைவாகப் பொற்றாமரையில் நீராடித் தங்கள் நியம காரியங்களை முடித்துப் போசனம் செய்ய ஆயத்தமானார்கள். ஆனால் பதஞ்சலி வியாக்ர பாத முனிவர்கள், "சுவாமி! அடியேங்கள் தினமும் தில்லையிலுள்ள பொன்னம்பலத்தில் தங்கள் திருநடனம் தரிசித்த பின்பே போசனம் செய்வது நியமம்" என்று கூறினார்கள். இங்கே நாம் செய்யும் நிருத்தம் மிகமிக முக்கியமானது. அற்புதமானது இட்ட சித்திகளையும் தர வல்லது. மேலும் இலிங்கங்கள் பக்தர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பூலோகத்தில் நமது இச்சையினால் இலிங்கங்கள் அமைந்தவாறு அருளுவோம். மனிதனுக்கு ஆறு ஆதாரங்கள் உண்டு. அந்த ஆறு ஆதாரங்களில் மூலதாரம் கமலாலயமாகிய திருவாரூர் இங்கு நாம் தியாகராசரரெனப் பெயர் பெறுவோம். சுவாதிட்டானம் திருவானைக்கா, இங்கு நாம் சம்புநாதரெனப் பெயர் பெறுவோம். நாபித்தானமாகிய மணிபூரகம் அருணாசலம், இங்கு நாம் அருணாசலேசரரெனப் பெயர் பெறுவோம். இருதய தானமாகிய அநாகதம் சிதம்பரம், இங்கு நாம் சபாநாயகர் எனப் பெயர் பெறுவோம். கண்டத்தானமாகிய விசுத்திகூண கைலாசமாகிய திருக்காளத்தி, இங்கு நாம் காளத்தியீசுவரெனப் பெயர் பெறுவோம். புருவமத்திய தானமாகிய ஆஞ்ஞை காசி, இங்கு நாம் விசுவநாதரெனப் பெயர் பெறுவோம். பிரமமரந்திரம் கைலாசம் இங்கு நாம் ஸ்ரீ நீலகண்டப்பரமேசுவரரெனப் பெயர் பெறுவோம். ஆதாராதீதமாகிய துவாசரந்தம் இங்கு நாம் சுந்தரேசுவரர் என்று பெயர் பெறுவோம். எனவே எனது பக்தர்கள் தம்தம் சரீரத்தின் மூலதாரம் முதல் ஆறு ஆதாரங்கள் வரை அந்த அந்த ஆதாரங்களுக்குரிய சிவலிங்கங்களைத் தாபிதம் செய்து பூசிக்கக் கடவர். மதுரை என்று கூறப்படுகின்ற துவாதசாந்தபுரம் மற்றய தானங்கட்கு முன்பு தோன்றியது. ஆதலால் இதுவே சிறந்தது. நம்முடைய மூர்த்திகளுள்ளே தாண்டவமூர்த்தியே சிறந்தது. ஆதலால் இத்தலத்தில் எமது தாண்டவத்தை உங்கட்குக் காண்பிப்போமென்று திருக்கோயிலினுள்ளே புகுந்தருளினார். அங்கு அவர் சங்கற்பமாகியவுடன் கீழ்திசையில் வெள்ளியம்பலமும் அதனிடத்தே மாணிக்க மேடையும் தோன்றியது.

சிவபெருமான் அந்த மேடையில் ஞானப் பேரொளியாகத் தோன்றினார். பூதகணங்கள் முழவு கொட்டின. திருநந்தி தேவர் முழவம் அடிக்க விட்டுணு தும்புருநாதர் ஆகியோர் இசைபாட நிருத்தம் செய்தருளினார். இதனைத் தரிசித்த பதஞ்சலி, வியாக்கிரபாத மகாமுனிவர்கள் ஆனந்தக் கண்ணீர் வெள்ளத்தில் திளைத்தவராய்

"பராபர முதலே போற்றி பக்தியில் விளைவாய் போற்றி
சராசர மாகி வேறாய் நின்ற பரனே போற்றி

சராசல வுரியாய் போற்றி கனகவம் பலத்து ளாடு
நிராமய பரமானந்த நிருத்தனே போற்றி போற்றி

ஒன்றாகி யைந்தா யையை தூருவாகி வருவாய் போற்றி
இன்றாகிச் சென்ற நாளா யெதிர்நாளா யெழுவாய் போற்றி
நன்றாகித் தீயதாகி நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமானந்த நிருத்தனே போற்றி போற்றி

அடியரேப் பொருட்டு வெள்ளியம்பலத் தாடல் போற்றி
பொடியணி தடந்தோள் போற்றி புரிசடை மகுடம் போற்றி
கடியவிழ் மலர்மென் கூந்தற் கயல்விழி பாகம் போற்றி
நெடியநற் பரமானந்த நிருத்தனே போற்றி போற்றி

இவ்வாறு காதலாற் கசிந்துபாடி சிவபெருமான் திருவடிகளில் அடியற்ற மரம்போல் வீழ்ந்தார்கள். சிவபெருமான் எழும் எழுமென்று பலமுறை கூறியபின் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் எழுந்து வணங்கிய படியே நின்றார்கள். சிவபெருமான், "உங்கட்கு யாது வரம் வேண்டுமெனக்" கேட்டார். பக்குவ ஆன்மாக்களின் பாசம் நீங்கும் பொருட்டு தினமும் நிருத்தம் செய்ய வேண்டுமென அம்முனிவர்கள் கேட்டார்கள். அவ்வாறாகட்டுமென எம்பெருமான் அருளினார். மார்கழித் திருவாதிரை நட்சத்திரம் தொடங்கி தொடர்ந்து அடுத்த மார்கழித் திருவாதிரை வரை பொற்றாமரை வாவியில் நீராடி இந்த நிருத்தம் தரிசிப்போர்க்குப் பஞ்சாட்சர மந்திரம் ஜெபிப்போரும் நினைத்த வரம் பெறுவார்கள்.

**குண்டோதரனுக்கு அன்னம் இட்ட கதை:**

தடாதகைப் பிராட்டியின் திருமணம் தரிசிக்க வந்த எல்லோரும் உண்பன, குடிப்பன போன்ற போசனம் செய்தபின்பு, உணவுவகைகள் மலைமலையாகக் குவிந்து காணப்பட்டன. இவற்றைக் கண்ணுற்ற பிராட்டியார் சிவபெருமானை நோக்கிச் சுவாமி, எமது திருக்கல்யாண வீட்டிற்குச் சமைத்த உணவு வகைகள் இமையமலையை விட விஞ்சிக் குவிந்து காணப்படுகின்றன என்று மொழிந்தார் சிவபெருமான் புன்னகை புரிந்து அருகில் நின்ற குண்டோதரனைக் கடைக் கண்ணால் பார்த்தார்.

குண்டோதரனின் வயிற்றில் வடமுகாக்கினி போல் பசியெடுத்தது. இதனால் குண்டோதரன் சிவபெருமானை நோக்கி "சுவாமி! பசியினால் வருந்துகின்றேன்" என்றான். அப்போது சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரை நோக்கி பசியினால் வாடும் இக்குண்டோதரனுக்கு ஒருபிடி சாதம்கொடு என்றருளினார்.

தடாதகைப் பிராட்டி தனது ஏவல் மகளிரை அழைத்துக் குண்டோதரனை அழைத்துப் போய் அன்னம் முதலான தயிர்வகை கறியமுது பழங்கள் யாவும் கொடுங்கள் என்றருளினாள். அவ்வாறே தடாதகைப் பிராட்டியின் ஏவல் மகளிர் பரிமாறினர். குண்டோதரன் மிகுந்த பசியினால் துடிதுடித்தான். பச்சையாக இருந்த உணவுவகைகளைப் பரிமாறியும் குண்டோதரரின் பசியடங்காது பசிபசியென்று ஆவிசோர்ந்து அயர்ந்தார்.

# மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

திரு. க.வேதநாயகம் அவர்கள்
மீசாலை.

மாமரத்தின் பல இனங்களும் மலிந்து விளங்கும் மீசாலைப் பகுதியிலே "சந்திரபுலம்" என்றோர் காணியிலே முத்தன் என்றோர் விவசாயி கொள்ளுக் கொத்தும்போது ஒரு திருநீலகண்டம் ஒரு மாவினடிக்கு ஓடியது. அதைக் கண்ட முத்தன் அதைக் கொல்ல முயற்சிக்க திருநீலகண்டம் மாவினடியில் உள்ள ஓர் துவாரத்தில் ஓடிமறைய அந்தத்துவாரத்தை முத்தன் ஆழமாக்க அங்கு இரத்தம் வெளியேறியது. "கணீர்" எனும் ஓர் சப்தமும் கேட்டது. திருநீலகண்டத்தைக் காண இயலவில்லை. ஆனால் அதில் ஓர் சிறிய விநாயக விக்கிரகம் காணப்பட்டது. மண்வெட்டிப்பட்ட காயமும் சிலையில் காணப்பட்டது. முத்தன் பயந்து வீட்டிற்குச் சென்று, உணவும் உட் கொள்ளாமல் உறங்கியபோது விநாயகப் பெருமான் அவனது கனவிலே தோன்றி அந்த மாவினடியிலே என்னை வைத்து வணங்கி நீ உண்ணும் உணவில் ஓர் பகுதியை எனக்குப் படைத்துவிடு" என்றருளியதால் முத்தனும் அவ்வாறு செய்து வந்தான்.

பின்பு முத்தன் அந்த சந்திரபுலம் என்ற காணியின் சொந்தக்காரராகிய முகமாலையில் வதிந்த கேகயரத்தின முதலியாரிடம் சென்று நடந்ததைச் சொன்னபோது முதலியாரும் மீசாலைக்கு வந்து அச்சிலையை வைத்து வணங்குவதற்காய் ஆலயம் அமைக்க எண்ணி அரசாங்கக் காட்டில் மரம் தறிக்க வன இலாக அதிகாரிகள் முதலியாரை நீதிபதி முன் நிறுத்திய ஞான்று மேல் விசாரணைக்குட்படுத்த விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி கட்டளையிட அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டார் முதலியார். அன்றிரவு நீதிபதியின் மனைவிக்கு முடத்து நோ ஏற்பட்டு அன்ன ஆகாரம் உட்கொள்ள இயலாது கஷ்டப்பட வைத்தியங்கள் செய்யப்பட்ட போது முடத்து நோ குறையாமல் கூடிக் கொண்டே சென்றதால் நீதிபதி ஆலயத் திருப்பணிக்கு மரம் தறித்த முதலியாரைத் தடுத்து மறியல் வைத்ததை நினைத்து முதலியாரை அழைப்பித்து மனைவிக்குத் திருநீறு கொடுக்கும்படி வேண்டினார். முதலியாரும் நீதிபதியின் மனைவிக்குத் திருநீறு வழங்கியதால் முடத்து நோ நீங்கியது. முதலியார் விடுவிக்கப்பட்டார். நீதிபதியும் ஆலயத்துக்கு ஒருபட்டுக் குடையையும் காணிக்கையாக வழங்கி வரலானார்.

ஆலயம் ஓரளவு அமைந்து அடியார்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்த, காலை ஒருநாள் அம்பலவாணி என்றோர் அந்தணன் கோயிலினுள் புகுந்து பல பொருட்களைத் திருடி வெளியில் வரமுற்பட்டபோது அவனுக்குக் கண்பார்வை நீங்கியதால் செய்வதறியாது அவன் ஆலய வாயிலின் அருகிலிருந்த சண்பக மரத்தில் ஏறியிருந்து விட்டான். விநாயகப் பெருமான் அன்றிரவு சரவணமுத்து நொத்தாரிசின் கனவில் தோன்றி "சண்பக மரத்தில் ஏறியிருந்த அந்தக் கள்வனை இறக்கி அவனுக்கு ஊறேதும் செய்யாது திருநீறு வழங்குவீர்" என்றதும் நொத்தாரிசும் அவ்வாறு செய்திடக் கள்வனின் கண்பார்வை கிடைத்தது. (சரவணமுத்து நொத்தாரிசு என்பார். கேகயரத்தின முதலியாரின் பேரனாவார்)

மேலும் ஒருநாள் சரவணமுத்து என்றதோர் அடியார் மேல் பொய்வழக்குப் போடப்பட்டதால் அவ்வடியார் கோட்டுக்கு செல்லும்போது "என்னைக் கோட்டார் சிரமம் இன்றி விடுவித்தால் அடியேன் மாவடிவிநாயகப் பெருமானுக்கு ஓர் சகடை செய்து தருவேன்" என்று நேர்த்தி நினைத்துச் சென்றார். அவர் பின்பு கோட்டாரால் விடுவிக்கப்பட்டதால் அவர் நேர்த்தி வைத்ததற்கிணங்கச் சகடை செய்வித்து வழங்கினார். அச்சகடையிலேதான் இன்றும் எம்பெருமான் திருவீதிவலம் வருகிறார்.

ஆலயத்திற்குத் திருமஞ்சனக் கிணறு அமைக்கவேண்டிப் பெரியோர் கூடி நல்ல நிலந்தேடியபோது பாம்பு ஒன்று ஆலயத்தின் வடபால் ஓரிடத்தில் வட்டமிட்டுச் சென்றது. அவ்விடத்திலே அமைக்கப் பெற்ற திருமஞ்சனக் கிணற்று நீரானது அயலிலுள்ள நீர் யாவற்றிலும் சிறந்து விளங்கும் அற்புதம் யாவராலும் பயபக்தியோடு மெய்ச்சப்படுகிறது. தென்மராட்சியில் பிரசித்தி பெற்ற விநாயகராலயமாக மிளிர்கின்றது.

*** *** ***

## பிள்ளையார்

வேழ முகத்து உடையவர்
எங்கள் பிள்ளையார்
வேண்டும் வரம் தருபவர்
எங்கள் பிள்ளையார்.

ஓம் என்னும் ஞானத்தால்
உதித்த மூத்த பிள்ளை
ஓங்கார மூர்த்தியாக விளங்கும்
எங்கள் பிள்ளையார்.

உலகமே அம்மை அப்பா
என்று சொன்ன பிள்ளையார்
ஆறு முக வேலனுக்கு
அண்ணனான பிள்ளையார்

முக்கனிகளில் மாம்பழத்தை
வாங்கி நிற்கும் பிள்ளையார்
மூவுலகும் வணங்கி நிற்கும்
எங்கள் தெய்வப் பிள்ளையார்

## அன்பு காட்டு தெய்வம்

அன்பு காட்டும் தெய்வம்
ஆதரித்து அருள் புரிவாயே
இன்னல்கள் வராமல் காத்திடுவாயே
ஈடில்லா கருணைமழை பொழிவாயே.

உண்மைக்கு என்றும் துணையாவாயே
ஊரெல்லாம் உன்நாமம் ஓங்கிடுமே
எல்லாம் அறிபவள் நீதானம்மா
ஏகாம்பரனுக்கு துணைவி யானவளே.

ஐங்கரனைப் பெற்ற அன்னையே
ஒன்பது ராத்திரியின் நாயகியே
ஓங்கார இசையில் மிளிர்பவளே
ஔடதமாக வேப்பிலைக்குள் இருப்பாயே.

இயற்றியவர்: கிருஷ்ணசாமி துர்க்காம்பிகை

# ஐம்பூத (பஞ்சபூத) வழிபாடு

திரு. ஆ. கதிரமலைநாதன் அவர்கள்

"பாரிடையைந்தாய் பரந்தாய் போற்றி;
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி;
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி;
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி;
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி" - திருவாசகம்

**கருத்து:-**

நிலம் - இது சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐங்குணங் களையும், நீர்- இது சப்தம், பரிசம், ரூபம், ரசம் என்ற நான்கு குணங்களையும், நெருப்பு- இது சப்தம், பரிசம், ரூபம் என்ற மூன்று குணங்களையும், காற்று- இது சப்தம், பரிசம் என்ற இரு குணங்களையும், ஆகாயம்- இது சப்தம் என்ற ஒரு குணமுமுடையது. இவ் எல்லாமாய் நிறைந்து போயுள்ள இறைவா உன்னை வாழ்த்துகின்றேன்.

**இறைவனாக:-**

இயற்கையினை இயக்கும் அனைத்து ஐந்து சக்திகளையும் ஒன்று திரட்டி உருவ வடிவங்களில் எம் முன்னோர் ஆலயத்தின் கருவறையில் பிரதிஷ்டை செய்து வைத்தனர். இவ் வகையில் இயற்கையை வழிநடத்தும் இப்பேராற்றல்களையும் போற்றி வணக்கம் செய்வதானது அவற்றின் சக்திகளையும் தம் நல் வாழ்விற்கு பயன்படுத்தும் நோக்கிலேயே அமைத்துக் கொண்டதாகலாம்.

**முன்னோடி:-**

பொதுவாக சமயத்தில் மிகப்பழைய வடிவம் இயற்கை ஆற்றல் வழிபாடானக இருந்தது. வெறும் விலங்கு நிலை உணர்விலிருந்து மனிதன் உயர்ந்த போது தன்னைச் சூழ்ந்துள்ள வலிமையான ஆற்றல்கள் மீதே பெரும்பாலும் தான் சார்ந்திருப்பதை உணர்ந்து கொண்டான். விலங்கு-பாம்பு-மரவணக்கம் என்பவை இவ்வகையில் எழுந்தவையே.

தனது சொந்த வாழ்க்கைப் பாடத்திலிருந்து, சகல ஆற்றல்களையும் தனது முயற்சிகளுடன் இணைத்துப் பார்த்த போது இவ் ஆற்றல்கள் யாவுமே மறைவாயிருந்து தன்னை ஆட்டிப்படைக்கின்றன என்பதனை ஏற்றுக் கொள்ள லானான்.

இவ்வடிப்படையில் தான் ஆதிக்குடிகள் இடி-மின்னல்-மழை-நெருப்பு போன்றவற்றினை தமது ஆற்றலுக்கு மேற்பட்டவையாக கருதி பயத்தின் காரணமாகவே வழிபட ஆரம்பித்ததாக சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**அடிப்படை:-**

இதன் விரிவாக்கமாகவே அவன் இயற்கை ஆற்றல்களை வெவ்வேறாக உருவகப்படுத்த முனையலானான். மேலும் பேராற்றல் காரணமாக அவற்றை இறைவனின் பிரிக்க முடியாத அங்கங்களாகவும் கருதலானான். அத்துடன் அவற்றுக்கு அஞ்சியே அவற்றினை புகழ்ந்து பாடி அவற்றின் சுபாவத்தினை மாற்றுவதற்காக அல்லது ஆதரவினை பெற்றுக்கொள்வதற்காக, வழிபாட்டினை செய்ய ஆரம்பித்திருக்கலாம் எனவும் விபரிக்கப்படுகின்றது. இதற்கு ஒருபடி மேலே சென்று அவற்றினை திருப்திப்படுத்துவதற்காக வேள்விகள் செய்யவும் முனையலானான்.

**தரைப்பெண்:-**

ஒரு மனிதனின் அடிப்படை வாழ்விற்கு தேவையான எல்லாவற்றையும் முக்கியமாக (உணவு, உடை, உறையுள்) வழங்கும் நிலத்தினை பூமித்தாயாக உருவகித்து வணங்கிய ஆரம்பவழிபாட்டு வழக்கத்தினை சிந்துவெளி நாகரிக அகழ்வுச் சான்றுகளிலிருந்தும் தெரிந்து கொள்ளக் கிடக்கின்றது.

**இரண்டாம் நிலைக்கு:-**

காலகதியில் இவ் இயற்கை சக்திகள் தாம் வழிப்படப்பட்டு வந்த உயர் நிலையிலிருந்தும் கீழே தாழ்ந்து போயின. வேள்விகளை செய்யும் - செய்விக்கும் வழக்கம் வலுப்பெற்ற நிலையில் அதனை செய்விப்பவன் "பிரஜைகளின் தலைவன்" (பிரஜாபதி) அல்லது "யாகங்களுக்கு அதிபதி" (யாகாதிபதி) என்ற உயர்நிலையை பெற்றுக்கொண்டதுடன் பேராற்றல் மிகுந்த இவ் ஐம்பூதங்களையும் சிறு தெய்வங்களாக்கிக் கொண்டு யாகம் நல்லபடி நிறைவேற்றுவதற்கு துணை புரிவனவாக கருதலானான்.

**ரிதம்:-**

இயற்கை தனக்கு வழங்கும் நன்மைகளை உணராது அதற்கு மேலும் மேலும் தீங்கு விளைவிப்பதனாலேயே நோய் நொடிகள் ஏற்படுகின்றன. இயற்கையிலிருந்து அறிவியலைக் கற்றுக் கொள்ளும் மனித சமுதாயம் அதனிடமிருந்து அறவியலையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே கிரியைகள் ஆற்றுவதன் அடிப்படை தத்துவமாகும். "ரிதம்" என்ற பெயரிலே வேத காலத்தில் ஏற்பட்ட இயற்கை நெறியும் இதுவே எனலாம்.

**தலங்கள்:-**

பொதுவாக கடவுளருக்கு செய்யப்படும் "பஞ்சோபசாரம்" ஐம்பூதங்களுடன் இணைந்ததாகவே காணப்படுகின்றது. தென்னாட்டில் இத்தகைய நெருங்கிய தொடர்பானது ஐம்பூத தலங்கள் என்ற வகையில் பிரசித்தி பெற்றுள்ளது. இறைவனையும் இயற்கைப் பேராற்றல்களையும் ஒன்றாகவும் - வேறாகவும் - உடனாகவும் உணர்த்துகின்ற சித்தாந்த உட்பொருளை உள்ளடக்கியதாக இது காணப்படுகின்றது.

**தைப்பொங்கல்:-**

இன்று பெரும்பாலான இந்துக்களினால் கொண்டாடப்பட்டுவரும் தைப்பொங்கல் பண்டிகையையும் ஒரு வகையில் இயற்கை வணக்கம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் தனித்தனியே ஒவ்வொரு சக்தியினையும் போற்றி வணங்குவதனையும் விடுத்து, தான் பிரத்தியட்சகமாகவே பார்க்கக்கூடிய உலக இயக்கத்திற்கு ஆதாரமான சூரிய பகவானுக்கு நன்றிக் கடனாக பொங்கலிட்டு வணங்க முற்பட்டுள்ளார்கள்.

சரணாகதி தத்துவத்தின்படி "என்செயலாவது யாதொன்றுமில்லை" என உணர்த்தும் இவ் இயற்கை பேராற்றல்கள் ஐந்தினையும் மதிப்பது இன்றைய நிலையில் மிகவும் அவசியமாகிவிட்டது. எனவே இந்துக்களைப் பொறுத்தவரை முன்னோர்கள் சொன்ன ஐம்பூத வணக்கத்தினை கைக்கொள்வதிலும் எவ்வித தயக்கத்திற்குமே இடம் வைக்கலாகாது என்பது தெளிவாகிறது.

# "விக்ரக வழிபாட்டின் விளக்கமும், கும்பாபிஷேகமும்"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
மதுரை ஆதீனம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1. வெளியில் உள்ள சப்தத்தைத் தன்னகத்தே இழுத்து ஒடுக்கி, பின்னர் வெளியிடும் ஆற்றல் ஆகாயத்திற்கு உண்டு. அதே தன்மை கல்லுக்கும் உண்டு. கல் மண்டபங்களிலும், மலைப்பிரதேசங்களிலும், சப்தங்கள் எதிர் ஒலியாவது போல வேறு எந்த இடங்களிலும் கிடையாது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

2. கல்லிலே காற்று உண்டு என்பதை "கல்லினுள் தேரைக்கும்" என்ற தொடரினை ஆய்வதிலிருந்து தெரியலாம். காற்று இல்லாத இடத்தில் எந்த ஜீவராசியும் உயிர் வாழ முடியாது. கல்லினுள் தேரை வசிக்க வேண்டுமானால் கல்லிலே காற்று இருக்க வேண்டுமல்லவா? எனவே, கல்லில் இரண்டாவது சொல்லப் பெற்ற காற்றும் உள்ளது.

3. இனி கல்லிலே நெருப்பு தங்கி இருப்பது போல் வேறு எந்தப் பொருளிலும் இல்லை. அதனால் தான் பழங்காலத்தில் நெருப்பு உண்டாக்க வேண்டுமானால் இரு கற்களை ஒன்றோடு ஒன்று உராயச் செய்து நெருப்பினை உண்டாக்கி உபயோகித்தார்கள். மரக்கட்டைகளைக் கடைந்தும் நெருப்பை உண்டாக்கினார்கள். இருந்தாலும் கல்லில்தான் நெருப்பின் சக்தி மிகுதியாக இருக்கிறது. அதிலும் சிக்கிமுக்கிக்கற்கள் என்பவை அந்த வகையில் மிகுந்த ஆற்றலுடையவை. அநேகமாக அவைதான் தீயினை உண்டாக்க அந்நாளில் உபயோகப்படுத்தப்பட்டன. ஆகவே கல்லில் நாம் மூன்றாவதாகச் சொல்லிய நெருப்பு உள்ளது.

4. மேற்கூறிய மூன்று ஆற்றல்களையுடையதாக இருந்தாலும் கல்லானது தன் இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமல் இருக்கும். இரு கற்களை ஒன்றோடு ஒன்று உராயச் செய்தால் நெருப்பு உண்டானபோதிலும், சாதாரணமாக கல்லைத்தொட்டால் அது தண்ணீர் போன்றே தண்ணென்றிருப்பதை எல்லோரும் அனுபவத்தில் உணரலாம்.

5. இனி ஐந்தாவதாக கல்லில் "நிலம்" என்ற கடைசிப் பூதம் இருக்குமா? என்பதைக் கேட்கவே வேண்டாம். கல்லே நிலத்தைச் சேர்ந்ததுதான் அல்லவா? கல்லிலே ஐம்பூதங்கள் இருப்பதற்கும், ஆண்டவனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். ஆண்டவனே ஐம்பூதங்களில் கலந்துதான் இருக்கிறார் என்பதற்கு மாணிக்கவாசகனார் திருவாசகம் சான்று தருகிறது.

"பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி,
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி,
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி,
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி,
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

என்பது திருவாசகத்தில் போற்றித் திரு அகவலில் வரும் அவ்வழகமைந்த பாடலாகும். ஐம்பூத வடிவாய் விளங்கும் அவ் ஆண்டவனது உருவத்தை ஐம் பூதங்களும் அடங்கிய ஒரு பொருளில் வீற்றிருக்கும்படி வேண்டுதல் செய்து வழிபடுவது சாலச் சிறந்ததல்லவா? அதனால்தான் நமது மூதாதையர்கள்

நாம் வழிபடும் மூர்த்திகளுடைய விக்ரகங்களை கல்லால் அமைத்தார்கள். மலைகளைத் தெய்வமாகக் கொண்டு வழிபடுவதும் இந்தத் தத்துவத்தைக் கொண்டுதான். என்று சொன்னால் அது மிகையாகாது.

**கற்சிலையும், செம்பு விக்ரகமும் பிரதிஷ்டை செய்த பின் தெய்வீக சக்தி பெறுவதின் விளக்கம்:-**

சாதாரணமாக ஒரு கல்லாலோ, செம்பாலோ ஆக்கப்பெற்ற சிலையானது ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் ஆனபின் தெய்வீக சக்தி பெற்று விசேஷ வழிபாடுகளுக்கும், வணக்கங்களுக்கும் உரிய தகுதி பெற்று திகழ்வது எங்ஙனம்? என்றும், அதை விளக்குவதற்கு ஒரு உதாரணம் அல்லது உபமானம் சொல்லலாமோ? என்றும் கேட்டால் நன்றாகச் சொல்லலாம். அறிவுடையோர் அதிலிருந்து அனுமானித்து உணர்ந்து கொள்ளலாம். சாதாரணமாக ஒருவர் ஒரு மடாதிபதியாக விளங்கி ஆட்சி நடத்துகிறார். மடாதிபதியாவதற்கு முன்னிருந்த மனிதர்தானே மடாதிபதியான பின்பும் இருக்கிறார் என்றால், ஆமாம். ஆனால் அதற்கு முன்பிருந்த பெயரும், சக்தியும் வேறு. மடாதிபதியான பின் அவருக்கு உரிய சிறப்புப் பட்டமும், சிறப்பு அதிகாரமும், எவ்வாறு பெறுகிறார்? அந்தந்த மடாலயத்தின் சட்டதிட்டங்களின் படியே சில சடங்குகள் நடைபெறுகின்றது. பட்டாபிஷேகம் என்ற குடமுழுக்கும் நடைபெறுகின்றது. புதிய சின்னங்கள் வழங்கப்பெறுகின்றன. சிறப்புப் பட்டமும், சிறப்பு அதிகாரமும் வழங்கப் பெறுகின்றன. அந்தப் பட்டமும், அதிகாரமும், மடாலயத்தாராலும், பொது மக்களாலும் அங்கீகரிக்கப்பெற்று அவற்றிற்குரிய சிறப்பு மரியாதைகளுக்கும் சிறப்பு உபசாரங்களுக்கும், அவரைத் தகுதி உடையவராகச் செய்கின்றது, என்பதை யாவரும் அறிவர்.

ஒரு சாதாரண மனிதன் ஒரு மந்திரப் பதவியையோ, அரச பதவியையோ, வேறு பதவிகளோ பெறும் பொழுது, அரசாங்கத்தின் சட்டப்படி அதற்குரிய சடங்குகள் நடைபெற்று அதற்குரிய சின்னங்களைக் கொடுக்கப்பெற்று அதற்குரிய அதிகாரம் வழங்கப் பெற்று அரசாங்கத்தாராலும், பொது மக்களாலும் அவை அங்கீகாரம் செய்யப் பெற்று, சிறப்பு மரியாதைகளுக்கும், உபசாரங்களுக்கும் உரிய தகுதியைப் பெறுகின்றான் என்பதையும் யாவரும் அறிவர்.

மேலே சொன்ன சிறப்புப் பட்டமும், சிறப்பு அதிகாரமும் பெற்றவர்கள் உருவத்தால் முன்னிருந்ததுபோலவே தோற்றம் அளித்தாலும், அவர்களுடைய சிறப்புப் பட்டமும், அதிகாரமும், ஆதிக்கமும், தகுதியும் முன்னிருந்த நிலைக்குமேல் அதிகமாக உள்ளன என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர் . அவ்வித பதவியையும், பட்டத்தையும், அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் பெற்ற அவரது உடல் அதற்கு முன் இருந்த உடலாகவும், வேற்றுமை ஒன்றும் இல்லாததாகவும் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

இந்த உதாரணங்களைக் கொண்டு ஒரு சாதாரண கற்சிலை, கும்பாபி ஷேகத்தினால் என்ன சிறப்புப் பட்டமும், அதிகாரமும், ஆதிக்கமும், பதவியும் பெறுகின்றதென்பதை அறிவுடையோர் உய்த்துணர்ந்து ஏற்றுக்கொள்ள முடியும். பூலோகத்திலுள்ள அரசாங்கம் நாம் அவ்வுலகத்தில் பிறந்தபின் அனுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்களை அமைத்து அச்சட்டதிட்டங்களை அமுல் நடத்து கின்ற அதிகாரிகளை நியமித்து அவர்கள் மூலம் ஆண்டு வருகிறது. ஆனால் நம்மை இப்பூலோகத்தில் ஆணாகவும், பெண்ணாகவும் வெவ்வேறு இடங்களில் பிறக்கும் படியும், வெவ்வேறு இன்ப துன்பங்களை அனுபவிக்கும் படியும், வெவ்வேறு வயது வரை வாழும்படியும் வயது முடிந்தபின் ஸ்தூல சரீரமாகிய

கட்டையிலிருந்து ஆவி உடலைப் பிரித்து மேல் உலகங்களுக்கு கொண்டுபோய் அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தகுந்த சுவர்க்க-நரகமென்னும், அருட்பகுதியிலோ-இருள் பகுதியிலோ, வாழும்படியும் அதற்குரிய கால எல்லையில் அந்த ஆவி உடலை அழித்து மறு பிறவியில் தள்ளவோ அல்லது மேல் நிலைக்கு எடுத்துக்கொள்ளவோ செய்கின்ற அரசாங்கம் ஒன்று விண்ணுலகத்திலிருந்து ஆட்சி புரிவதையும், அந்த ஆட்சி வேதாகம சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடைபெறுவதையும், அச்சட்டதிட்டங்களை நிறைவேற்றுகின்ற பலதரப்பட்ட அதிகாரிகள், பலதரப்பட்ட அதிகாரங்களோடும், பலதரப்பட்ட உருவங்களில், நம்முடைய கண்களுக்குக் காண முடியாத சூட்சும நிலையிலிருந்து அமுல் நடத்தி வருகிறார்கள் என்பதையும், ஞான நாட்டம் உடையவர்களெல்லாம் ஓரளவு அறிவார்கள்.

ooo ooo ooo

## மனசினால் உயர்ந்து, திருப்தியோடு வாழ வேண்டும்

விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்நாளில் எளிய மக்களால் குடும்பம் நடத்துவது கடினமாக இருக்கிறது. இதற்கு வழி இல்லையா என்ற கேள்விக்குக் காஞ்சிப் பெரியவர் வழி கூறுகிறார்.

ஒருவன் இரண்டு காபி சாப்பிடுவது, நான்கு வேளையாக உயரவேண்டும். இரண்டு வேஷ்டி வைத்துக்கொள்ள வேண்டும். இதுவே வாழ்க்கைத்தர உயர்வு என்கிற அபிப்பிராயம் வளர்ந்தால் அது பெரிய தப்பு. வாழ்க்கைத்தரம் உயர்வது என்று சொல்லிக் கொண்டு வாழ்க்கைத் தேவைகளை அதிகப்படுத்திக் கொண்டு போவதால் துராசைதான் அதிகமாகும். எத்தனை சம்பாதித்தாலும் போதாது.

வசதி இருக்கிறது என்று இவர்கள் பண்ணுகிற சுகஜீவனம், அதை ஒட்டிய காரியங்கள் ஆகியவை அபரிக்கிரஹம் என்ற தர்மத்துக்கு விரோதமானது தான். இந்த மனப்பான்மை மலிந்து விட்டால் தெய்வ அனுக்கிரகம் கிடைக்கவே கிடைக்காது.

மனித ஜன்மம் ஜீவனுள்ளதாக இருக்கவேண்டுமானால் நமக்கு ஜீவிப்பிதற்கு அத்தியாவசியமாக எவ்வளவு தேவையோ, அதற்கு மேல் இம்மி கூட விரும்பக்கூடாது. இதுவே அபக்கிரஹம். வசதி இருக்கிறது என்றால் அதைக்கொண்டு அடிப்படை வசதிகளைக் கூடப்பெற முடியாதவர்களுக்கு உதவி செய்வது தான் நியாயம், தர்மம், புண்ணியம். அதுதான் ஒருவனுக்கு மோட்சத்தை அளிக்கும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் யாரும் காபி சாப்பிட்டதில்லை. குடிசையில் தான் வாழ்ந்தார்கள். பெண்கள் காதில் பனைஓலைதான் போட்டுக் கொண்டிருந்தார்கள். கேழ்வரகுக் கூழோ, கஞ்சியோ தான் சாப்பிட்டார்கள். ஏழைகளோ, பணக்காரர்களோ, எல்லோரும் ஏறக்குறைய ஒரேமாதிரியான வீட்டில் தான் இருந்தார்கள்.

நம் ஜனங்கள் யாவரும் பட்டுத்துணி உடுப்பதில்லை, காபி குடிப்பதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டு விட்டால் இப்போது ஒரு குடும்பத்துக்கு செலவாகிற பணத்தைக் கொண்டு ஐந்து குடும்பங்கள் வாழமுடியும்.

வாழ்க்கைத்தரம் என்பது STANDRD OF LIVING என்ற சொற்றொடரின் சரியான மொழிபெயர்ப்பு அல்ல. வாழ்க்கைத்தரம் என்பது மிகவும் உயர்ந்த விஷயம். நல்ல குணங்களுடன், ஈஸ்வர பக்தியுடன் வாழ்கிற வாழ்வு தான் தரமான வாழ்வு. வாழ்க்கைத்தரத்தை நாம் QUALITY OF LIFE வாழ்க்கைப்

பண்பு என்று தான் சொல்லவேண்டும். அதுதான் உண்மை. தற்போது பொருளாதாரத் தேவைகளை அதிகமாக ஆக்கிக்கொண்டு போவதைத்தான் வாழ்க்கைத்தரம் என்று மதிப்பிடுகிறார்கள். இதை விட்டு மனசினால் உயர்ந்து உண்மையாகவே வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வது தான் சிறந்தது. அதைத்தான் பெரிதாக எண்ணவேண்டும்.

குறுக்கு வழிகளில் பணம் சம்பாதிக்கலாம், பெயர் புகழ் எல்லாவற்றையும் அடையலாம். ஆனால் அவை எதுவுமே நிலைக்காது. கடைசியில் அவமானத்திலும், அவப்பெயரிலும் தான் கொண்டுபோய் விடும். இராவணன் எல்லாக் கலைகளையும் அறிந்தவன். பெரும்புகழோடு சக்ரவர்த்தியாக வாழ்ந்தவன். ஆனால், கடைசியில் அவனுடைய கதி என்ன ஆயிற்று? அவன் வசதியாக வாழவில்லையா என்று நாம் நினைக்கலாம். ஆனால், அவனுடைய முடிவு எப்படியிருந்தது? மகனை இழந்து, தம்பியை இழந்து, உற்றாரை இழந்து, தானும் வேதனையால் துடித்து உயிர் விட வேண்டியதாகிவிட்டதல்லவா? என்கிறார் ஸ்ரீ சத்யசாயி பாபா. சிந்தித்துச் செயலாற்று. அளிக்கவே தீட்டு என்று சொல்லி அவர்களிடம் நாம் அடிக்கடி செல்லாதபடி வைத்தார்கள் பெரியோர்கள். மரணமும் அதுபோலவே உயிர் பிரிந்த உடல் உடனேயே கெட்டுவிட ஆரம்பிக்கும். ஈக்கள் மொய்க்கலாம், பக்டீரியாக்கள் உற்பத்தியாகி சுற்றியுள்ளவர்கள் அனைவரையும் தாக்கலாம். இறந்தவர்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டிருக்கலாம். அந்த நோய்க்கிருமிகள் சூழ்நிலையில் பரவலாம். இதனைத் தடுக்கவே இறந்தவர்கள் வீட்டிற்குச் சென்று துக்கம் விசாரித்து விட்டு வந்தவர்களை குளிக்கச் சொன்னார்கள்.

தூய்மைக்கேட்டைத் தவிர்க்கவும் சுகாதார வசதிகளுக்காகவுமே பல காரியங்களை தீட்டு என்று சொல்லி சம்பந்தப்பட்டவர்களை தொடாமல் ஒதுக்கி வைத்தார்கள்.

நன்றி: இந்துமத ஆசார அநுஷ்டானங்கள்

## கடவுள்

**கடவுள் எத்தனை பேர்? ஒருவர். அவரை அறிவேன். அவரே ஆன்மாவின் மூலமாவர். -உபநிடதம்.**

**என்னைவிட உயர்ந்த தொன்றுமில்லை. முத்துக்கள் நூலில் கோத்துள்ளதுபோல் பிரபஞ்சம் முழுவதும் என்னிடமேயுளது. -பகவத் கீதை.**

## *"கவினுற வெளிவரும் கருத்துக் கலசமே"*

சிந்தனையைத் தூண்டும் சிவஞான அருவியாம்
சிறந்த ஒரு புத்தகம் 'அருள் ஒளி'
வந்தனை செய்கின்றோம் வளமுடன் வளர்ந்திடவே
வாழ்த்துக்கள் கூறுகின்றோம் வாழிய நீடூழி!
உந்தனை எதிர்பார்க்கும் உள்ளங்கள் எத்தனையோ
உத்தமவழி காட்டும் கலங்கரை விளக்கமே!
எந்தனை மகிழ்விக்கும் அறிவுப் பெட்டகமே
என்றென்றும் நிலைபெற்று 'அருள் ஒளி' தருவாயே

கண்ணியமாய்க் கருத்துக்கள் கட்டுரைகள் தாங்கியே
கவினுற வெளிவரும் கருத்துக் கலசமே!
புண்ணியம் யாம்செய்திட்டோம் புவியில் நீ மலர்ந்து
புத்தொளி வீசியே புதுமைகள் செய்கின்ற
எண்ணிலா வாசகரின் உள்ளத்தைக் கவர்ந்த நீ
எழிலுறவே கரங்களில் தவழ்ந்து வளர்ந்து
மண்ணிலே நல்ல மாண்புடன் திகழ்ந்திடவே
மனமார வாழ்த்துகின்றோம் வாழ்க பல்லாண்டே!

**கவிமணி இராசையா ஸ்ரீதரன்**
நாச்சிமார் கோயிலடி


அன்னையிடம்
பேராசிரியர்
ஆசிபெறுகின்றார்
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களின்
மணிவிழாக் காட்சி
பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
தலைமைதாங்குகின்றார்
விழாவில்
பேராசிரியர்
தம்பதிகள்



ஆன்மீகப் பெரியார் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின்
ஆன்மீக விழா யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில்
பல்லாயிரம் மக்கள் மத்தியில் நடைபெற்ற காட்சி



அட்டைப்பதிப்பு: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம் நல்லூர்.